இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 50 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 11 – வியாழக்கிழமை 28 செப்டம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 50: Thiruvalluvar Year - 2054 - Purattasi 11 - Thursday 28 September 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## கோரிக்கை மனுக்களோடு வருபவர்களை முதலில் அமரச் செய்து கனிவோடு நடத்துங்கள்!

# மக்கள் சேவையை மனதில் வைத்துப் பணியாற்றுங்கள்!

## அரசுப் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!

**சென்னை, செப். 28 -**

**அரசுப் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "கோரிக்கை மனுக் களோடு வருபவர்களை முதலில் அமரச் செய்து கனிவோடு நடத்துங்கள்" என்றும் "மக்கள் சேவையை மனதில் வைத்துப் பணியாற்றுங்கள்" என்றும் அறிவுரை வழங்கினார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி 4 பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 12 தேர்வர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்த விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) கே.நந்தகுமார், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.09.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி 4 பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

"அரையணா காசாக இருந்தாலும் அரசாங்க காசு" என்று கிராமங்களில் சொல்வார்கள். ஏனென்றால், அரசாங்க வேலைக்கு இருக்கின்ற மவுசு, எந்தக் காலத்திலும் குறையாது.

போட்டித் தேர்வுகளில் தேர்வு பெற்று, எப்படியாவது ஒரு அரசுப் பணியை வாங்கிவிட வேண்டும் என்பது, படித்த இளைஞர்களுடைய ஒரு பெரிய கனவு!

அந்த அடிப்படையில், இன்றைக்கு உங்களுடைய இலட்சியக் கனவு நிறைவேறி இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அதனுடைய அடையாளம்தான், இப்போது உங்கள் கையில் இருக்கின்ற பணி நியமன ஆணைகள்.

**ஒருவருக்கு வேலை கிடைத்தால் ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் பயன்!**

இந்த நொடி, உங்களுக்கும் – உங்கள் அப்பா, அம்மாவிற்கும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்குமோ, அதே மகிழ்ச்சியோடுதான் நானும் இங்கே உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன் ஒருவருக்கு வேலை கிடைக்கிறது என்றால், அது ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் பயனளிக்கும்.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், பல தலை முறைக்கும் பயன ளிக்கும். அந்த வகையில், பல தலைமுறைக்கு பயனளிக்கப்போகின்ற பணி நியமன ஆணை தான், உங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறோம்.

பல லட்சம் பேர் தேர்வு எழுதி, லட்சத்தில் ஒருவராக நீங்கள் எல்லாம் தேர்வாகி இருக்கிறீர்கள். இப்படி லட்சத்தில் ஒருவராக இருக்கின்ற உங்களுக்கு, 'மக்கள் சேவை' என்ற ஒன்றுதான் இலட்சியமாக இருக்க வேண்டும். அதற்காக மட்டும்தான் நீங்கள் எல்லோரும் பணியாற்ற வேண்டும்.

மக்களுக்காக மக்களால் நடத்தப்படுவதே மக்களாட்சி! அந்த வகையில் அரசாங்கம் தீட்டுகின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், அது மக்கள் நன்மைக்காகத்தான்!

**அரசின் திட்டங்களை விரைந்து நிறைவேற்றவேண்டும்!**

அரசின் திட்டங்கள், பல்வேறு சேவைகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் மிக முக்கியமான பணியை நீங்கள் எந்தக் குறையுமில்லாமல் நிறைவேற்றவேண்டும்.

"மக்கள் சேவையே, மகேசன் சேவை" என்று பேரறிஞர்அண்ணா அவர்கள் சொன்னார். அப்படிப்பட்ட மகத்தான பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்கள் எல்லோரையும் இந்த நேரத்தில் நான் மனதார பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

**உடல் உறுப்பு தானம் செய்து அரசு மரியாதையைப் பெற்ற முதல் அரசு ஊழியர்!**

நீங்கள் எல்லோரும் இப்போது அரசு ஊழியர்களாக ஆகியிருக்கிறீர்கள். அரசு ஊழியர்களில் தன்னலம் கருதாமல் மக்களுக் காகவே வாழுகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக நான் இந்த மேடையில் நான் சொல்லியே ஆகவேண்டும்.

கடந்த சனிக்கிழமை, 23ஆம் தேதி, நான் ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருந்தேன். "இறக்கும் முன்பு உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்" என்று அந்த அறிவிப்பில் சொல்லியிருந்தேன்.

மனித நேயமிக்க இந்த உடல் உறுப்பு தானம் செய்து, அரசு மரியாதையோடு அடக்கம் செய்யப்பட்ட முதல் நபர், ஒரு அரசு ஊழியர்தான்!

## "நான் முதல்வன்" திட்டத்தில் 13 லட்சம் பேருக்கு பயிற்சி!

தேனி மாவட்டம், சின்னமனூரில் மூளைச் சாவு அடைந்ததால், உடல் உறுப்பு தானம் செய்த அரசு ஊழியர் வடிவேலு அவர்களது உடல் நேற்று, அரசு மரியாதையோடு அடக்கம் செய்யப்பட்டது. இந்த இறுதிச் சடங்கில் நம்முடைய அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும், மாவட்ட நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

வடிவேலு அவர்களுடைய உடல் உறுப்புகளை தானமாகப் பெற்றவர்களின் குடும்பங்கள் சார்பாக மட்டுமில்லை, அவருடைய குடும்பத்தினருக்கு, தனிப்பட்ட என்னுடைய நன்றியையும், ஏன், அரசு ஊழியர்களாக இங்கே இருக்கக்கூடிய உங்கள் எல்லோருடைய சார்பில் தமிழ்நாடு முதலமைச்சராகவும் நான் அந்த குடும்பத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் செய்தி உடல் உறுப்பு தானம் பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தும். அந்த வகையில், அரசு ஊழியராக பணியாற்றுகின்ற வடிவேலு அவர்கள், காலத்திற்கும் மக்களால் நினைவுகூரப்படுவார்.

**அரசு ஊழியர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றுங்கள்!**

ஒரு கருவியோ அல்லது இயந்திரமோ சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால், அதில் இருக்கின்ற ஒவ்வொரு பாகமும் பழுதில்லாமல் சிறப்பாக செயல்படவேண்டும். அது போலத்தான், அரசு என்ற மாபெரும் இயந்திரம் சீரிய முறையில் மக்களுக்கு சேவை செய்ய, அரசு ஊழியர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் முழு ஈடுபாட்டுடன் பங்களிக்க வேண்டும்!

"செய்வானை நாடி வினைநாடிக்
காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

என்ற வள்ளுவரின் வாக்குக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொடுத்த உரை அதில் என்ன சொன்னார் என்றால், "ஒரு செயலை செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலை ஆராய்ந்து, அதனை நிகழ்த்து வதற்கான காலத்தினை உணர்ந்து செயல்படுத்த வேண்டும்" என்பதுதான்.

நமது அரசாங்க இயந்திரத்தை திறம்பட செயல்படுத்த தகுதியான அரசு அலுவலர்கள் தெரிவு செய்வதை தமிழ்நாடு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையில் அக். 13 -அன்று

# 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!


## திருவுருவப் படத்தை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சென்னை, செப்.28-**

**'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் அக்.13 அன்று நடைபெறுகிறது. இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவரும் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கழகத்தின் கருவூலம் தன்மான இயக்கத்தின் சிங்கம் தந்தை பெரியாரின் மாணவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர் – கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப்பேரவை உறுப்பினராகவும்: பின்னர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்



கப்பட்டு கழகக் கொள்கையினை நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர்.

பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதி பலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிபப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்ட "ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா" வையொட்டி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவரது படத்தை திறந்து வைத்து, சிறப்புரை ஆற்றிட, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் வருகிற 13-10-2023 (வெள்ளிக்கிழமை), மாலை 5.30 மணியளவில், சென்னை, "இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது. சென்னை கிழக்கு மாவட்டம் இந்நூற்றாண்டு விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு தலைமைக் கழக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 28-09-2023

# ‘மனிதாபிமான மிகு’ முதல்வர்

எந்த ஒன்றையும் சொல்வதற்கு முன்னால் தானே செய்து காட்டுவதே மாபெரும் மானுடப் பண்பு. அந்த வகையில் 2009 ஆம் ஆண்டே உடல் தானம் செய்தவர் அன்றைய துணை முதலமைச்சர் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் - மு.க.ஸ்டாலின் அவர்கள்.

2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் நாள் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையின் விழாவுக்குச் சென்றிருந்தார்கள் அன்றைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அவரது மனைவி மரியாதைக்குரிய துர்கா அம்மையார் அவர்களும். இருவருமே அன்று உடல் தானம் வழங்குவதற்கான உறுதிமொழிப் படிவத்தில் கையெழுத்திட்டார்கள். அப்போது மிகப்பெரிய பாராட்டும் வரவேற்பும் இணையர் இருவருக்கும் கிடைத்தது.

அன்றைய தினம் பேசிய மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், “உடல் உறுப்புகளைத் தானம் செய்வது இன்று நேற்றல்ல கடந்த கால வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளது. மன்னர்கள், நாயன்மார்கள் உறுப்புகளைத் தானம் செய்துள்ளனர். கண்ணப்ப நாயனார் தனது இரண்டு கண்களையும் தானமாக வழங்கியதாக புராணம் கூறுகிறது. இன்றைய அறிவியல் வளர்ச்சி காரணமாக ஒருவர் உடலில் உள்ள உறுப்புகளை எடுத்து வேறு ஒருவருக்குப் பொருத்தி உயிர் வாழ வைக்கும் சம்பவங்கள் பெருகி வருகின்றன” என்று குறிப்பிட்டார்கள்.

**“2008 செப்டம்பர் மாதம் திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த ஹிதேந்திரனுக்கு சாலை விபத்தில் மூளைச் சாவு ஏற்பட்டது. அவரது இதயம் மாற்று அறுவை சிகிச்சை மூலம் பெங்களூருவில் உள்ள ஒரு சிறுமிக்கு பொருத்தப்பட்டது. சென்னை மருத்துவர்களின் இந்த சாதனையை மறக்க முடியாது. அவரது பெற்றோரின் நற்செயலை நான் நேரில் அவர்களது வீட்டுக்குச் சென்று பாராட்டினேன். அவரது பெற்றோருக்குச் சுதந்திர தினவிழாவில் விருது வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பித்தார்கள். அதேபோல எல்.ஐ.சி. கிளை மேலாளர் ராமகிருஷ்ணன் மகள் சுகன்யாவுக்கு சாலை விபத்தில் மூளைச் சாவு ஏற்பட்டது. அவரது கண்கள்,**

**சிறுநீரகம் உள்பட 7 உறுப்புகள் எடுக்கப்பட்டு தேவையானவர்களுக்குப் பொருத்தப்பட்டன. இதுபோல திருச்சியைச் சேர்ந்த வைத்தியநாதன் மகன் நிர்மல்குமாரின் இரண்டு சிறுநீரகங்கள், கண்கள், கல்லீரல், அகற்றப்பட்டு பலருக்குப் பொருத்தப்பட்டது. இப்படி பல சம்பவங்கள் நடந்து வருகின்றன. உறுப்புகளை பலர் தானம் செய்ய முன் வந்தாலும் எப்படி வழங்குவது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த இயக்கம் பயன்படும்” என்றும் செய்திகளை அடுக்கினார்கள்.**

இந்த இயக்கம் அன்று முதல் உன்னிப்பாக கவனத்துக்குரியதாக ஆகியது. 2021 ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி மலர்ந்ததும், இது போன்ற உறுப்பு தானம் எண்ணத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதனை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டிவிட்டது.

டெல்லியில் நடந்த 13 ஆவது இந்திய உறுப்பு தான தின விழாவில், சிறந்த மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு விருதை தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கடந்த ஆகஸ்ட் மாதம் வழங்கினார். 2008 ஆம் ஆண்டு உறுப்பு தானம் திட்டம் தி.மு.க. ஆட்சியில் தொடங்கியதில் இருந்து, 1,706 நன்கொடையாளர்களிடம் இருந்து 6,249 முக்கிய உறுப்புகளை அரசு மீட்டெடுத்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் உறுப்பு கொடை வழங்கியவர்களின் எண்ணிக்கை 313

உடல் உறுப்பு தானத்தில் சிறந்து விளங்கும் மாநில விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது. ஒன்றிய சுகாதார அமைச்சக தரவரிசையில் மாநிலம் மீண்டும் முதல் இடத்தைப் பிடித்தது. “உடலுறுப்பு தானம் என்பது தமிழ்நாட்டில் ஓர் இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே மிகப் பரந்த மனதுடைய மக்களும், மிகச் சிறந்த மருத்துவக் கட்டமைப்பும் இங்கு இருப்பதால்தான் உறுப்புகளை தானம் செய்வதில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளோம். தீயும் மண்ணும் தின்னும் உடலைப் பிறர்க்களித்து அவர்களுக்கு வாழ்வளிக்க முன்வருவோம்! அனைவரும் உடலுறுப்பு தானம் செய்வோம்!” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது கோரிக்கை வைத்திருந்தார்.

**இந்த நிலையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க - மனிதாபிமான உத்தரவு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். ‘உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்’ என்பதுதான் மனிதாபிமான மிகு அறிவிப்பாகும். “உடல் உறுப்பு தானம் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு அடைந்த துயரச் சூழலிலும், அவர்களது உடல் உறுப்புகளைத் தானமாக அளிக்க முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால்தான் இந்த சாதனை சாத்தியமாகி உள்ளது. தமது உறுப்புகளைத் தந்து, பல உயிர்களைக் காப்போரின் தியாகத்தைப் போற்றும் வகையில், இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்” என்ற முதல்வரின் அறிவிப்பை பல்வேறு தரப்பினரும் வரவேற்று வருகிறார்கள்.**

“தற்போது சிறுநீரகத்துக்காக 6,179 பேர், கல்லீரலுக்கு 449 பேர், இதயத்துக்கு 72 பேர், நுரையீரலுக்கு 60 பேர், இதயம் மற்றும் நுரையீரலுக்கு 24 பேர், கணையத்துக்கு ஒருவர், கைகளுக்கு 26 பேர் காத்திருக்கின்றனர்” என்று சொல்லி இருக்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

**முதலமைச்சரின் அறிவிப்பு உயிர்காக்கும் அறிவிப்பாக அமைந்திருக்கிறது.**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தொகுதி 4 பணியிடங்களுக்குத் தேர்வான

# 10,205 இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்!

**சென்னை, செப்.28-**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி 4 பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி 4 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 12 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

தமிழ்நாடு மாநில அரசுப் பணிகளில், இளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர், தட்டச்சர், சுருக்கெழுத்தர் போன்ற தொகுதி4ல் அடங்கிய வெவ்வேறு பதவிகளுக்கான 10,205 காலிப் பணியிடங்களை நிரப்பிடும் வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற போட்டித் தேர்வில் சுமார் 22 இலட்சம் பேர் பங்கேற்று, அதில் 10,205 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் “அரசுப் பணி” என்ற கனவை நனவாக்கும் வகையில் போட்டித் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ள 10,205 இளைஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில், பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 12 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி சிறப்பித்தார்.

அரசின் பல்வேறு துறைகள், குறிப்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக்கல்வித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, பொதுப்பணித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு தட்டச்சர் 3339, இளநிலை உதவியாளர் 5278, கிராம நிர்வாக அலுவலர் 425,

வரி தண்டலர் 67, புல உதவியாளர் 19, சுருக்கெழுத்து தட்டச்சர் - 1077, என மொத்தம் 10,205 பணியிடங்களுக்கு இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதியதாக பணியில் சேரும் இளைஞர்களுக்கு அரசுப் பணியின் முக்கியத்துவத்தை விளக்கியதோடு, அரசுப் பணியாளர்கள் பொதுமக்களுக்கு சேவை மனப்பான்மையுடன், குறித்த காலத்திற்குள் பணியாற்றி, அரசின் திட்டங்கள் யாவற்றையும் உடனுக்குடன் மக்களுக்கு சென்றடையும் வகையில் சிறப்பான பணியினை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் 10,205 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்கள்.

இந்த விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) கே.நந்தகுமார், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மேற்கு வங்கத்திற்கு ரூ.15,000 கோடி நிதியை நிறுத்திவைத்த ஒன்றிய அரசு! முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு!

*கொல்கத்தா, செப்.28-*

*மேற்குவங்க மாநிலத்திற்கு வழங்க வேண்டிய 15 ஆயிரம் கோடி நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்தி வைத்துள்ளதால், பிரதமர் மோடிக்கு 50 லட்சம் கண்டன கடிதங்களை அனுப்ப திரிணாமுல் காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.*

*எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி பகிர்ந்தளிப்பதில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தொடர்ந்து பாரபட்சமாக செயல்பட்டு வருகிறது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆளும் மேற்கு வங்கத்திற்கு வழங்க வேண்டிய 15 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்காமல் நிறுத்தி வைத்துள்ளது. நிலுவையில் உள்ள நிதியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான பெரும் தொகை அடங்கும். இதானல், 100 நாள் வேலை திட்டத்தில் பயன்பெற வேண்டிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டி யுள்ளார்.*

*ஒன்றிய பாஜக அரசின் அநீதிக்கு எதிராக அனைவரும் ஒன்று சேர்ந்து, 50 லட்சம் கடிதங்களை சேகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அனைத்து கடிதங்களும் பிரதமர் மோடிக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.*

## தொடர் விடுமுறை

# 1,100 சிறப்பு பஸ்கள் இயக்கம்!



சென்னை, செப். 28 –

அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் கே. இளங் கோவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இன்று (28ந் தேதி) மீலாது நபி, (29ந் தேதி) சனிக்கிழமை, (அக்.1ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை, (அக்.2ம் தேதி) காந்தி ஜெயந்தி என 4 நாட்கள் தொடர்ச்சியாக விடுமுறை வருகிறது. இதற்கிடையில் வெள்ளிக்கிழமை விடுப்பு எடுக்கும் பட்சத்தில் ஐந்து நாட்கள் விடுமுறை கிடைப்பதால் பயணிகள் சொந்த ஊர்களுக்குச் சென்று வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு சென்னையில் இருந்து இன்று இயக்கக்கூடிய பஸ்களுடன் கூடுதலாக 250 பஸ்களும், நாளை (29ம் தேதி) 450 பஸ்களும் இயக்கப்படுகின்றன. இதேபோல, கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து முக்கிய இடங்களுக்கும் 400 சிறப்பு பஸ்கள் என மொத்தம் 1,100 பஸ்கள் இயக்கப்பட இருக்கின்றன என்று போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளன.

மேலும், (அக்டோபர் 2ம் தேதி) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. பயணிகள் www.tnstc.in மற்றும் tnstc இணையதளம் மூலமாக முன்பதிவு செய்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



# வருகிற 2 ஆண்டுகளில் மேலும் 50 ஆயிரம் பேருக்கு அரசுப் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகிய முகமைகள் இந்த வேலையை சிறப்பாக செய்து கொண்டு வருகிறார்கள்.

**விடைத்தாள் மதிப்பீடு செய்கிற கால தாமதத்தை சரிசெய்ய நடவடிக்கை!**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளுக்கு இலட்சக்கணக்கான தேர்வர்கள் விண்ணப்பிக்கிறார்கள். அதனால் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இதைச்சரிசெய்ய, விடைத்தாள்களை மதிப்பீடு செய்கின்ற முறையை எளிதாக்கவும், கால தாமதத்தை தவிர்க்கவும், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் 95 இலட்சம் ரூபாய் செலவில், ஆன்ஸ்கிரீன் எவாலுவேஷன் லேப் என்ற உயர் தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அதே போல, ஆசிரியர் பணிகளுக்கான தெரிவுகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் செய்து முடிக்க, நமது அரசு 20.9.2021 அன்று குழு ஒன்று அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டது.

அந்தக் குழுவினுடைய பரிந்துரை அடிப்படையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தை மறுசீரமைப்பு செய்து 3.1.2023 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன்படி 74 புதிய பணியிடங்கள் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப பிரிவு, கணக்குப்பிரிவு, நிர்வாகப் பிரிவு, அறிவிக்கைப் பிரிவு, சட்டப்பிரிவு, தகவல் உரிமைச் சட்டப்பிரிவு, குறைதீர்க்கும் பிரிவு ஆகிய பிரிவுகள் எல்லாம் நிரப்பப்பட்டிருக்கிறது.

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் படித்தவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டது.

**தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க ஒன்றிய அரசிடம் வலியுறுத்தல்!**

கடந்த 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பயன் பெறவேண்டும் என்று தமிழ் கட்டாயத் தகுதித் தேர்வு தாளை அறிமுகப்படுத்தி, அது இப்போது நடைமுறையில் இருக்கிறது. இதற்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கின்ற வகையில், தமிழ் கட்டாயத் தகுதித் தேர்வு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்கின்ற எல்லோரும் எதிர்கொள்ளவேண்டும் என்று உரிய சட்டத்திருத்தமும், சட்டமன்றத்தில் நாங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறோம்.

தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் வாரியங்கள் போன்றவற்றில் இருக்கின்ற காலிப் பணியிடங்கள் தேர்வாணையத்தின் வாயிலாக நிரப்ப புதிய சட்டத்தை இயற்றி, அதன் அடிப்படையில், இப்போது தேர்வாகியிருக்கின்ற உங்களுக்கும் இன்று உரிய பணி ஆணை வழங்க இருக்கின்றேன்.

தமிழ்நாட்டுல இருக்கின்ற பல்வேறு ஒன்றிய அரசுத் துறைகளான இரயில்வே அஞ்சல் துறை வங்கிகள் – ஆகியவற்றில் இருக்கக் கூடிய காலிப் பணியிடங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் தொடர்ந்து நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இது தொடர்பாக பிரதமர் அவர்களுக்கு 12.10.2021 அன்று கடிதமும் எழுதியிருக்கிறேன்.

**ஒன்றிய அரசுப் பணிகளின் தேர்வுகள் தமிழில் நடத்த கோரிக்கை!**

அது மட்டுமில்லாமல், ஒன்றிய அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் தமிழ் மொழியிலும் நடத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன். 26.12.2022 அன்று இதை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறேன். என்னுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, ஸ்டாஃப் செலக்‌ஷன் கமிஷன் வாயிலாக, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தரத்தில், பன்முகப் பணியாளர் (மல்ட்டி டாஸ்கிங் ஸ்டாப்ஸ்) பதவிக்காக நடத்தப்படுகின்ற தேர்வை தமிழ் மொழியிலும் எழுதலாம் என்று ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தி இருக்கிறது. இதை தமிழ்நாட்டு இளைஞர்களுக்காக கழக அரசு பெற்றுத் தந்திருக்கக்கூடிய ஒரு வெற்றியாகவே நான் கருதுகிறேன்.

> **ஏதோ ஒரு ஊரில், ஏதோ ஒரு ஏழையின் கண்ணீரை உங்கள் கரங்கள் துடைத்தால் அதனால் அடைகின்ற பெருமை என்பதும் என்னைத்தான் சேரும். அதே நேரம், யாரோ ஒருத்தரை உதாசீனப்படுத்தினால் அதனால் வருகின்ற வசவும் – திட்டும் கூட என்னைத்தான் வந்து சேரும். எனவே எனக்கு நல்ல பெயராக இருந்தாலும் – கெட்ட பெயராக இருந்தாலும் உங்கள் செயல்பாட்டைப் பொறுத்துதான் அது அமையும்.**

என்னோட கனவுத் திட்டமான 'நான் முதல்வன் திட்டம்' பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். கடந்த ஆண்டு மட்டும் 13 லட்சம் இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சி தரப்பட்டுள்ளது.

**"நான் முதல்வன்" திட்டத்தில் இலக்கைத் தாண்டி பயிற்சிகள்!**

இது நிர்ணயித்த இலக்கான பத்து லட்சத்தை தாண்டி, பயிற்சி பெற்றிருக்கிறார்கள்!

தனியார் நிறுவனங்களில் பல ஆயிரங்கள் ரூபாய் செலவு செய்து பெற வேண்டிய பயிற்சியை நம்முடைய இளைஞர்களுக்கு இலவசமாக இப்போது வழங்கிக் கொண்டு வருகிறோம்.

ஒன்றிய அரசால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளிலும், நம்முடைய மாணவர்கள் அதிகமாக தேர்வாகவேண்டும் என்று S.S.C, R.R.B, வங்கிப் பணி போன்றவற்றிற்காக 5000 பேருக்கு ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்புகளை நான் முதல்வன் திட்டத்தில் நாம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

7.03.2023 அன்று இது துவக்கி வைக்கப்பட்டது. இதில் பயிற்சி பெற்ற 90 நபர்கள், ஒருங்கிணைந்த வங்கிப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வில் தேர்வாகியிருக்கிறார்கள். மண்டல – ஊரக வங்கிகளில் எழுத்தர் பணிக்கான முதனிலைத் தேர்வில் 40 பேர் தேர்வாகியிருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டு மாணவர்கள் குடிமைப்பணி தேர்வில் அதிகம் தேர்ச்சி பெறவேண்டும்!**

குடிமைப் பணித் தேர்வில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெறவேண்டும் என்று முதனிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 1,000 பேருக்கு மாதந்தோறும் 7,500 ரூபாய் ஊக்கத்தொகையும், பயிற்சியும் வழங்குகின்ற புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

வருகின்ற அக்டோபர் மாதத்திலிருந்து இது தொடங்கப்படும். இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி, மாநில அரசுப் பணிகள் போலவே, ஒன்றிய அரசுப் பணிகளிலும் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகளவில் தேர்வாக வேண்டும்.

நம்முடைய அரசு அமைந்த கடந்த இரண்டாண்டு காலத்தில் 12 ஆயிரத்து 576 பேருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது 10 ஆயிரத்து 205 நபர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமில்லாமல், நடப்பாண்டில் மேலும் 17 ஆயிரம் பேருக்கு பல்வேறு அரசுப் பணிகள் வழங்கப்பட இருக்கிறது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், பல்வேறு அரசுப் பணிகளுக்கு சுமார் 50 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

**அரசு நிர்வாகத்தில் புதிய வேகம் – உற்சாகம் தோன்றும்!**

உங்களைப் போன்ற இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுவது என்பது அந்தக் குடும்பங்களில் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தித் தருவதோடு அரசு நிர்வாகத்தில் ஒரு புதிய வேகத்தையும், உற்சாகத்தையும் இது நிச்சயமாக அளிக்கும்.

அரசின் திட்டங்கள் பாரபட்சமில்லாமல் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும். நம்முடைய அரசின் கொள்கையை அரசின் அங்கமாக இருக்கின்ற நீங்கள் எல்லோரும் மனதில் வைத்து செயலாற்ற வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு சமூகநீதி காக்கும், மக்கள் நலன் பேணக்கூடிய அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு அரசனிடம் முறை வேண்டும் போதெல்லாம், எளிமையாக காட்சி தந்து தீர்ப்பை பெற்றால், விரும்பும் போது மழையை பெற்றது போல மக்கள் மகிழ்வார்கள் என்று புறநானூறு சொல்லுகிறது.

அதைப் போல மக்கள் உங்களிடம் கோரிக்கையுடன் வரும்போதெல்லாம் என்னுடைய இன்னொரு முகமாக, என்னுடைய பிரதிநிதியாக, இந்த அரசாங்கத்தின் அலுவலராக இருக்கின்ற நீங்கள், மக்களை எளிமையாக அணுகி, அவர்கள் குறைகளையும், பிரச்சனைகளையும் தீர்த்து வைத்து, அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் அவர்களிடம் சேர்த்து பயனடையச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் அதைத் தான் நீங்கள் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ ஒரு ஊரில், ஏதோ ஒரு ஏழையின் கண்ணீரை உங்கள் கரங்கள் துடைத்தால் அதனால் அடைகின்ற பெருமை என்பதும் என்னைத்தான் சேரும். அதே நேரம், யாரோ ஒருத்தரை உதாசீனப்படுத்தினால் அதனால் வருகின்ற வசவும் – திட்டும் கூட என்னைத்தான் வந்து சேரும். எனவே எனக்கு நல்ல பெயராக இருந்தாலும் – கெட்ட பெயராக இருந்தாலும் உங்கள் செயல்பாட்டைப் பொறுத்துதான் அது அமையும்.

**மக்களுக்கு உண்மையாக நீங்கள் பணியாற்ற வேண்டும்!**

உங்களில் யாரும் பொது ஒழுங்கிற்கு மாறாக, பண்பாட்டிற்கு மாறாக நடந்து கொள்ள மாட்டீர்கள் என்று நான் முழுவதுமாக நம்புறேன். நீங்களும் நடுத்தர ஏழை எளிய – விளிம்பு நிலைக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் தான். யாரால் ஆளாக்கப்பட்டு இந்தப் பணியை நீங்கள் அடைந்திருக்கிறீர்களோ அந்த மக்களுக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குரூப் 4 என்பது உங்க முதல் படிதான். இதற்கு அடுத்து மேல் நிலையில் உள்ள தேர்வுகளையும் எழுதி உயர்பொறுப்புகளுக்கு வாருங்கள்.

உங்களால் முடியும்! உங்களால் மட்டுமே முடியும்! உங்களால் முடியாதது வேறு யாராலும் முடியாது என்று இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமில்லை, உங்களுடைய தந்தை நிலையில் இருந்தும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**இது உங்கள் அரசு என்பதை உங்களிடம் வருபவர்களிடம் உணர்த்துங்கள்!**

நிறைவாக, இன்று பணியாணை பெற்றிருக்கும் உங்களுக்கும், இந்த நிகழ்ச்சி யின் மூலமாக அனைத்து அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை அலுவலர்கள் வரை உள்ள அனைவருக்கும் நான் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புறேன்.

## அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்!

உங்களிடம் கோரிக்கை மனுவுடன் வருகிறவர்களிடம் முதலில் உட்கார வைத்து பேசுங்கள். அவர்களுடைய பிரச்சினையை, கோரிக்கையை காது கொடுத்து கேளுங்கள். அதுவே வந்தவர்களுக்கு ஒரு பெரிய நம்பிக்கையைத் தரும்; மன நிறைவை தரும்! உட்கார வைத்து பேசுறது தான், சக மனிதருடைய சுயமரியாதை என்று நினைத்து அதற்கு மதிப்பு கொடுங்கள். அதனால், என்னுடைய இந்தக் கோரிக்கையை எல்லாரும் கடைப்பிடிப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படி கேட்டால், அவர்களுடைய பாதி பிரச்சனை தீர்ந்து போய்விடும், பாதியளவுக்கு நிம்மதியை அடைந்துவிடுவார்கள்.

"இது உங்கள் அரசு தான்" என்பதை உங்களை சந்திக்க வருகிறவர்களிடம் உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கருணையின் அடையாளமாக விளங்கும் நபிகள் பெருமானார் பிறந்தநாளில்

# இஸ்லாமிய மக்களுக்கு 'மீலாதுன் நபி' நன்னாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 28-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி வருமாறு:-

மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு அண்ணல் நபிகள் நாயகம் பிறந்த நாளை எழுச்சியோடு கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு "மீலாதுன் நபி" நன்னாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நம்பிக்கைக்குரியவர்", "அடைக்கலம் அளிப்பவர்", "வாய்மையாளர்" எனப் பொருள்படும், "அல் அமீன்" எனும் சிறப்புப் பெயர்கொண்டு அவர்மீது அன்பு கொண்ட பொதுமக்களால் அழைக்கப்பட்ட நபிகள் பெருமானார், ஏழைகளின் மீது இரக்கம் காட்டுபவராகவும், ஆதரவற்றோரை அரவணைத்து ஆதரவுக் கரம் நீட்டுபவராகவும் கருணையின் அடையாளமாக விளங்கினார்.

**மகத்தான மனிதநேயத்துக்கு சொந்தக்காரர் நபிகள்!**

"ஏழை எளியவர்களுக்கு உணவளியுங்கள்" என்ற மகத்தான மனிதநேயத்திற்குச் சொந்தக்காரரான அண்ணல் நபிகளாரின் சீரிய போதனைகளும், சிறந்த அறிவுரைகளும், செழுமையான வழிகாட்டுதல்களும், ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டியவை மட்டுமின்றி. அவை பொன்னேபோல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை!

அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தநாளாகிய "மீலாதுன் நபி" நன்னாளை இஸ்லாமிய மக்கள் மகிழ்ந்து கொண்டாட வேண்டும் என்பதற்காக முதன்முதலாக, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்ற 1969ஆம் ஆண்டிலேயே அரசு விடுமுறை நாளாக அறிவித்துச் செயல்படுத்தினார். ஆனால், அந்த மீலாதுன் நபி நாள் விடுமுறையை 2001இல் அ.தி.மு.க. அரசு ரத்து செய்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் 2006இல் அமைந்தவுடன், மீலாதுன் நபித் திருநாளுக்கு "அரசு விடுமுறை" வழங்கியது.

**இஸ்லாமிய சமுதாயத்துக்கு கழக அரசின் சாதனைகள் ஏராளம்!**

என்றைக்கும் சிறுபான்மையின மக்களின் உற்ற தோழனாக உரிமைப் பாதுகாவலனாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இஸ்லாமியர்க்கு மூன்றரை விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை நல்கி, தமிழ்நாட்டில் வாழும் இஸ்லாமிய சமுதாய மக்களின் நலன் காத்து நிற்கிறது.

> **"என்றைக்கும் சிறுபான்மையின மக்களின் உற்ற தோழனாக உரிமைப் பாதுகாவலனாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இஸ்லாமியர்க்கு மூன்றரை விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை நல்கி, தமிழ்நாட்டில் வாழும் இஸ்லாமிய சமுதாய மக்களின் நலன் காத்து நிற்கிறது."**

மேலும், உருது பேசும் முஸ்லீம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது; சிறுபான்மையினர் நல ஆணையத்தை தொடங்கியது; வக்பு வாரிய சொத்துக்களைப் பராமரிக்க முதன்முதலாக மானியம் வழங்கியது; தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கியது; உருது அகாடமியைத் தொடங்கியது; கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கி, இடம் ஒதுக்கியது; காயிதே மில்லத் மகளிர் கல்லூரியை உருவாக்கியது; காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரிக்கு இடம் கொடுத்தது எனத் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் இஸ்லாமிய சமுதாயத்துக்காகச் செய்த திட்டங்களையும் சாதனைகளையும் பட்டியலிட்டுக் கொண்டே இருக்கலாம்.

**சிறுபான்மையினர் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு!**

இந்த ஆழங்காற்பட்ட பேரன்பின் தொடர்ச்சியாகத்தான் நமது திராவிட மாடல் அரசிலும், சிறுபான்மையினர் விடுதியில் பண்டிகைகளுக்குச் சிறப்பு உணவு; உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கான உதவித்தொகை அதிகரிப்பு; சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் கட்டப்பட நிதி ஒதுக்கீடு; தமிழ்நாடு வக்பு வாரியத்துக்கான நிர்வாக மானியம் அதிகரிப்பு; பள்ளிவாசல்கள், தர்க்காக்கள், வக்பு நிறுவனங்கள் பழுது பார்ப்பதற்காக ஆண்டு தோறும் வழங்கப்படும் மானியம் அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

அண்ணல் நபிகளாரின் நற்போதனைகளிலிருந்து வழுவாமல் வாழ்ந்து வரும் இஸ்லாமிய சமுதாய மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த மீலாதுன் நபி நன்னாள் நல்வாழ்த்துகளை அன்போடு தெரிவித்து மகிழ்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---



தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் 119வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (27.09.2023) சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதைச் செலுத்தினார்கள். இந்நிகழ்வின் போது, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் அ.நாராயணன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், கவிஞர் காசிமுத்து மாணிக்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைமுன், "கலைஞர் ஞாபகங்கள்" பாடல் வெளியீட்டு விழா, நேற்று (27.9.2023) தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது. மா.ப. அன்புதுரை வரவேற்றார். அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பாடலை வெளியிட்டனர். தலைமை நிலையச் செயலாளர்கள் எஸ்.பூச்சி முருகன், கு.க.செல்வம் மற்றும் சூர்யா வெற்றிகொண்டான், கலை கதிரவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பாடலாசிரியர் ஈரோடு இறைவன் 'இசையமைத்த எஸ்.எச்.அப்துல்காதர்' பாடிய நெடுவாசல் செந்தில் தாஸ் ஆகியோரை கழக முன்னணியினர் பாராட்டினர். இந்நிகழ்வில் தாயகம் கவி எம்.எல்.ஏ., நிவேதா முருகன், சு.சதீஷ், ஆயிரம் விளக்கு தவமணி, குறிஞ்சி என்.சிவக்குமார், சு.சதீஷ், பொன்னேரி சிவா, ராமன், ராபர்ட் நாகம்மை கருப்பையா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கழக சட்டத்துறை சார்பில் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில்

# சென்னை மண்டல சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கிறார்!

சென்னை, செப். 28-

தி.மு.க. சட்டத்துறை சார்பில் நடைபெற உள்ள சென்னை மண்டல சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் வரும் 30.09.2023 (சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி ஆடிட்டோரியத்தில் நடைபெறவுள்ள சென்னை மண்டல சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

இதுகுறித்து மேற்கொண்டு தகவல்கள் பெற விரும்புவோர் சட்டத்துறை தலைமையால் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சு போட்டிக்கான ஒருங்கிணைப்பாளர்களை தொடர்புகொண்டு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்!**

கே.எஸ்.இரவிச்சந்திரன் 9840022250

(சட்டத்துறை இணைச் செயலாளர்)

ஜெ.பச்சையப்பன் 9840260178

(சட்டத்துறை துணைச் செயலாளர்)

கே.சந்துரு 9444006999

(சட்டத்துறை துணைச் செயலாளர்)

கே.ஜே.சரவணன் 9841057345

(தலைமைக் கழக வழக்கறிஞர்)

**பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரிகள்!**

1) அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு

2) அரசு டாக்டர்.அம்பேத்கர் சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர், திருவள்ளூர் மாவட்டம்.

3) பி.எஸ்.அப்துர் ரஹ்மான் பல்கலைக் கழகம், சென்னை

4) சவிதா பல்கலைக் கழகம், சென்னை

5) வேல் டெக் ரங்கராஜன் டாக்டர்.சகுந்தலா ஆர் & டி இன்ஸ்ட்டியூட் ஆப் சயின்ஸ் & டெக்னாலஜி, சென்னை

6) விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் பவுண்டேசன், காஞ்சிபுரம்

7) சாய் பல்கலைக்கழகம், சென்னை,

8) டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை.

9) பிரிஸ்ட் பல்கலைக்கழகம், புதுச்சேரி வளாகம், புதுச்சேரி

மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த கல்லூரி முதல்வர்களை தொடர்புகொண்டு பேச்சுப் போட்டியின் முக்கி யத்துவத்தை எடுத்துக்கூறி மாணவர்களை பங்கு பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

**இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் வருகிற 01.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 09.00 மணி அளவில் செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் சாலையில் உள்ள சிவகார்த்திக் ஏ/சி ஹாலில் நடைபெறும் இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டியை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைக்கவுள்ளார்.

மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத்தை தொடர்புகொண்டு 3 வருடத்திற்கு உட்பட்ட இளம் வழக்கறிஞர்களை இப்போட்டியில் பங்குபெறச் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தகவல்களுக்கு: என். கனகராஜ் 9443114734

(காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அமைப்பாளர்)

இவ்வாறு கழக சட்டத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஒன்றியச் செயலாளர் ந.பரிமளம் தலைமையில்

# கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் 3000 பேருக்கு நலஉதவிகள்!

## கே.வி.உமாமகேஸ்வரி – சி.எச்.சேகர் வழங்கினர்!

திருவள்ளூர், செப். 28-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிபூண்டி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி சுண்ணாம்பு குளம் ஒப சமுத்திரம் ராக்கம்பாளையம் - மெதிபாளையம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் நடைபெற்றது. அதில் 3000 ஏழைகளுக்கு இலவச சேலை அறுசுவைஉணவு மற்றும் மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி தொகை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி கே.வி. உமாமகேஸ்வரி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளருமான சி.எச். சேகர், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர், சுந்தரம் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடாஜலபதி, குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கு கும்மிடி பூண்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ந.பரிமளம் தலைமை வகித்தார்.

மாவட்டப் பிரதிநிதி ஆர்.எஸ்.காளத்தி வரவேற்று பேசினார்.

இதில் வி.சரவணன், கே.இ.திருமலை, என்.எஸ். மூர்த்தி, இ.பிரபு, வி.புருஷோத்தமன், பத்மஜா கௌரி சங்கர், வள்ளியம்மாள், பழனி மெய்யநாதன், ஜி.வீரன், கே.விஜயகுமார், ஆர்.சரத்குமார், ஜி. லோகேஷ், எம்.சரவணன், த.பிரபாகரன் உள்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





சென்னை கலைவாணர் அரங்கில் உலக சுற்றுலா தினத்தையொட்டி நேற்று (27.9.2023) நடைபெற்ற தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் – 2023 வழங்கும் விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்கள், உணவகங்கள், டிராவல் நிறுவனங்கள், அரசுத்துறைகள் உள்ளிட்ட சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.09.2023), சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.ஜோதி என்பவரை நேரில் சந்தித்து அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது இருதயத் துறை தலைவர் பேராசிரியர் மரு.மனோகர், சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு. கவிதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. பவானி, உள்ளுறை மருத்துவர் மரு. சுப்பிரமணியன் மற்றும் உயர் மருத்துவப் பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.

### அரசு மருத்துவமனையின் உன்னதச் சேவையை

# அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துவதா?

## எடப்பாடி பழனிச்சாமி - விஜயபாஸ்கருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில்!

சென்னை, செப்.28-

"அரசு மருத்துவமனையில் உன்னத சேவையை அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துவதா?" என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் எடப்பாடி பழனிச்சாமி, விஜயபாஸ்கர் ஆகியோருக்கு காட்டமான பதிலளித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.09.2023), சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.ஜோதி என்பவரை நேரில் சந்தித்து அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

15/09/2023 அன்று, திருமதி ஜோதி என்ற 32 வயது பெண், தனியார் மருத்துவமனையில் இருந்து, மாரடைப்பு நோய் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காக இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருதய நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இரண்டு நாட்கள் தக்க மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் coronary angiography பரிசோதனை செய்யப்பட்டது.

பரிசோதனைக்குப் பின்னர் அவரது கையில் வீக்கம் ஏற்பட்டது. பரிசோதனையில் அவருக்கு இரத்த நாள அடைப்பு ஏற்பட்டது என கண்டறியப்பபட்டது. பின்னர் அவரது கால்களிலும் இரத்த நாள அடைப்பு ஏற்பட்டது. Systemic arterial thrombosis என்ற இரத்த நாளங்கள் அடைப்பு நோயினால் பல நாளங்களில் அடைப்பு (இரத்த உறைவு) ஏற்பட்டது என தெரிய வந்தது.

சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய் போன்ற காரணிகள் இல்லாத நிலையில் நடுவயதுப் பெண்ணான இந்த நோயாளிக்கு மாரடைப்பு ஏற்பட்டது கூட, அடிப்படையில், இரத்தம் உறைதல் தன்மை கொண்ட நோயினால் தான் ஏற்பட்டுள்ளது.

மேலும், வலது கை இரத்த உறைவினால் செயலிழந்து விட்டதால், முழங்கைக்கு மேல் வரை அகற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தவரை சிகிச்சை அளித்து காப்பாற்றி உள்ளோம். சிகிச்சையில் தவறு நடந்திருந்தால் நிரூபிக்கலாம், முழு ஒத்துழைப்பு அளிக்க தயாராக உள்ளோம்.

இந்நிலையில் எடப்பாடி பழனிச்சாமி, விஜயபாஸ்கர் எந்த உயரிய மருத்துவர்கள் வேண்டுமானாலும் அழைத்து வந்து அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் அரசு மருத்துவமனையின் உன்னத சேவையை அரசியல் லாபத்துக்காக பயன்படுத்த வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! டி.எம்.ஜோசப் தலைமை!

# பம்மல் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு - சாதனை விளக்கக் கூட்டம்!

## குத்தாலம் அன்பழகன் – இ.கருணாநிதி பங்கேற்பு! த.ஜெயக்குமார் – கோ.காமராஜ் – மு.சித்ரா தேவி வரவேற்புரை!

காஞ்சிபுரம், செப்.28-

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி, 31 வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் 19.9.2023 - செவ்வாய் கிழமை மாலை 5 மணியளவில் வேம்புலியம்மன் கோவில் அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு 31 வது வட்டக் கழகச் செயலாளர் டி.எம்.ஜோசப் தலைமை வகித்தார். கே.சந்திரன், மு.ஸ்ரீதர், இரா.குமரேசன், இரா.பாபுஜி, ஏ.சேகர், தி.ச.நடராஜன், சத்தியவாணி விஜயகுமார், மா.விஜயகுமார், பி.கல்யாணகுமார், கே.சீனிவாசன், ஆர்.ஸ்ரீதர், டி.எம். செல்வம், என்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார், துணை மேயர்கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர் சித்ரா தேவி முரளிதரன் ஆகியோர் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழகசொற்பொழிவாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் க. வசந்தகுமாரி, வே.கருணாநிதி, இரவி. நரேஷ் கண்ணா, எஸ். கே.நெப்போலியன், சத்தியபிரபு, எல்.பிரபு, ச.பிரபு, க. ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி. பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, பி.ஆண்டவன், இ. பாலாஜி, ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ஜெ.சண்முக சுந்தரி, வி.கலைவாணி, எம்.வி.வாணிஸ்ரீ, த.சித்ரா உள்ளிட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், 29, 30-வது வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், முன்னாள் வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆர்.முரளிதரன், வி. கோதண்டராமன், வி.கௌதம், பி.கார்த்திக், ஆர்.ஜனார்த்தனன் ஆகியோர் நன்றி கூறினர்.

### தியாகராயர் நகர் 141. வது வட்டக் கழகத் தோழர்

# கே.மருதவீரன் மனைவி எம்.விஜயலட்சுமி மறைவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி



சென்னை,செப்.28-

தியாகராயர் நகர் 141 வது வட்டக்கழகத் தோழர் கே. மருதவீரனின் மனைவியும், கே.எம்.வீ.முருகேசனின் தாயாரும்,கழக வர்த்தக அணி தென் மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் பூங்கொடி ஆர் கோவிந்தராஜின் மாமியாருமான எம்.விஜயலட்சுமி அவர்கள் நேற்று (27.9.2)23) காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் மாவட்டச் செயலாளர் மயிலை தா. வேலு எம்.எல்.ஏ. பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, வர்த்தக அணி மாநிலச் செயலாளர் கவிஞர் காசி.முத்துமாணிக்கம்,தென் மேற்கு மாவட்ட அமைப்பாளர் மயிலை பாலு, ராஜா அன்பழகன், பி.மாரி,லட்சுமி காந்தன், உதய சூரியன், லலிதாபுரம் துரை,ஜி.பி.செந்தில்குமார், சக்திவேல்,ஏ. கோவிந்தராஜ், சுதர்சனம்,ஜானகிராமன் உள்பட கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த எம்.விஜயலட்சுமி உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில்( நெம்.17, நேதாஜி தெரு,

ரெட்டி குப்பம்ரோடு, சைதை) இருந்து இன்று ( 28.9.2023) காலை 10 மணிக்கு புறப்பட்டு கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்ற.

### முனைவர் பொற்கோ தலைமை!

# நிலவு பூ.கணேசன் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா!

## இரா.கிரிராஜன் எம்.பி. –அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

சென்னை,செப்,28,

விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு சார்பில் நிலவு பூ.கணேசன் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீட்டு விழா 30.9.2023 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு டி.யு.சி.எஸ். காமதேனு திருமண மண்டபம் ( அண்ணா அறிவாலயம் அருகில்) அண்ணா சாலை,தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.விழாவில் விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ச.சண்முகநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கழக சட்டத் திருத்தக் குழு உறுப்பினர் இரா.கிரிராஜன் எம்.பி., சோ.முல்லையப்பன்,ப.சேரலாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விழாவிற்குத் தலைமையேற்று மலரை சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் பொற்கோ வெளியிட, டாக்டர் வே.நமச்சிவாயம்,அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பெற்றுக் கொள்கின்றனர்.

தமிழ் நாடு அரசு எம். ஜி.ஆர்.திரைப்படக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜே.வி. மோகனகிருஷ்ணன், எஸ். ஜே.எஸ். முஸ்தாக் பாட்சா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.


விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு நிறுவனர் நிலவு பூ.க. செல்வமணி நன்றி கூறுகிறார்.



நேற்று (27.09.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி தலைமையில் நகர் ஊரமைப்பு துறை மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பா. கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை சைதாப்பேட்டை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரக அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி "ஊராட்சி மணி" என்ற அழைப்புமையத்தை நேற்று (27.09.2023) துவக்கி வைத்து பொது மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஊராட்சிகளைத் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு இலவச குறை தீர்வு அழைப்பு '155340'என்ற எண்ணை அறிமுகம் செய்து வைத்தார். இந்நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை முதன்மை செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பா.பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது) எம்.எஸ்.பிரசாந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.



அரசுமுறைப் பயணமாக எகிப்து தலைநகர் கெய்ரோ சென்றுள்ள தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று (27.9.2023) அந்நாட்டின் செனட் துணை சபாநாயகர் பாஹா எல்டின் ஸுக்கா (Bahaa ElDin shukka) அவர்களின் தலைமையில் நடைபெற்ற செனட் சபையின் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், அந்நாட்டின் செனட் செகரட்டரி ஜெனரல் முகம்மது இஸ்மாயில் இட்மேன் (Mahmoud Ismail Etman), இந்திய தூதர் அஜித் குப்தா, அசாம் சட்டப் பேரவைத் தலைவர் பிஸ்வாஜித் டைமாரி ஆகியோர் உள்ளனர்.

### அரசியல் மற்றும் ஆட்சி நடத்துவதில் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மிகச் சிறப்பாக செயல்படுகிறார்!

## சேலம் அரசு விழாவில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

சேலம், செப்.27-

"அரசியல், ஆட்சி நடத்துவதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து மிகச்சிறப்பாகச் செயல்படுகிறார்" என்று அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறினார்.



சேலத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழாவிற்கு தலைமையேற்று அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது :

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது 7 முக்கியமான திட்டங்களை அறிவித்தார்கள். அந்தவகையில், 7 திட்டங்களையும் ஒவ்வொன்றாக நிறைவேற்றி இறுதியாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தையும் நிறைவேற்றி, 1.06 கோடி மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதியான மகளிர் விடுபட்டிருந்தால் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் நாள்தோறும் பல்வேறு பணிகள், சுற்றுப் பயணங்கள் செய்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அரசுப் பணிகளை ஒருங்கிணைத்து உடனடியாக அந்த பணிகளை நிறைவேற்றுவதற்குரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

**கொட்டும் மழையில் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!**

அந்தவகையில், நேற்றிரவு இரவு 10 மணியளவில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் சேலம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அங்கு தங்கிப் பயின்றுவரும் மாணவர்களிடம் அவர்களுக்குத் தேவையான வசதிகள் குறித்து கேட்டறிந்து, உடனடியாக நிறைவேற்றித்தரப்படும் என்று கூறினார்கள். அந்தவகையில் தற்பொழுது இந்நிகழ்ச்சியிலேயே ரூ.1.15 இலட்சம் மதிப்பிலான விடுதி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது.

மகன், தந்தைக்கு ஆற்றும் உதவி என்பதுபோல அரசியல் மற்றும் ஆட்சி நடத்துவதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பொது மக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து, அவர்களுக்குத் தேவையானவற்றை கேட்டறிந்து, முறையாக அரசுக்குத் தெரிவித்து நிறைவேற்றி வருகிறார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் பிடித்த மாவட்டத்தில் இது போன்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள்,

மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி தி.சுவாதி ஸ்ரீ, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம், அஸ்தம்பட்டி மண்டலக்குழு தலைவர் திருமதி உமாராணி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ப.இரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.

### பொதுமக்கள் குறைகளைத் தெரிவிக்க

# "ஊராட்சி மணி" குறை தீர்க்கும் மையம் திறப்பு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 28 -

ஊரகப் பகுதிகளில் ஏற்படும் குறைகளைக் களையும் பொருட்டு "ஊராட்சி மணி" என்கிற அமைப்பு ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், பொது மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஊராட்சிகளைத் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு இலவச குறை தீர்வு அழைப்பு எண்"155340" பிரத்யேகமாக மாநில அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறை மூலம் பொது மக்கள் மிக எளிமையாக தொலைபேசி (155340), வலைதளம் (Ooratchimani.in) மூலம் எளிதாக அணுக முடியும். மேலும் பெறப்படும் புகார்களின் தன்மைக்கேற்ப அலுவலகரீதியிலான கால தாமதம் தவிர்க்கப்பட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்புகார் மீது எளிய முறையில் உடனடித் தீர்வு காணப்படும். மேலும்ஊராட்சி பிரதி நிதிகள் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு ஏற்படும் குறைகளையும், சந்தேகங்களையும் இந்த ஊராட்சிமணி மூலம் அணுகி பதில்பெறும் வகையில் இச்சேவை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று 27.09.2023 காலை 11.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மை செயலாளர், முனைவர் ப. செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்பா.பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது), எம்.எஸ்.பிரசாந்த், மற்றும் இதர அலுவலர்கள் பங்கேற்றனர்.

# தி.மு.க. கூட்டணியில்தான் இருக்கிறோம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேட்டி!

சென்னை, செப். 28-

தி.மு.கழக கூட்டணியில் தான் இருக்கிறோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் நேற்று பேட்டியளித்தார்.



ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, அண்ணா அறிவாலயம் சென்று தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து பேசினார். சுமார் 20 நிமிட நேர சந்திப்புக்குப் பிறகு வைகோ நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்

கேள்வி : - தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. தொடருகிறதா?

பதில்: தி.மு.க. கூட்டணியில்தான் இருக்கிறோம்.

கேள்வி : - அ.தி.மு.க.பா.ஜனதா கூட்டணி முறிவுக்கு பிறகு தி.மு.க. கூட்டணியில் சிறு சலசலப்பு ஏற்பட்டு உள்ளதாக தெரிகிறதே?

பதில்: இங்கு எந்த சலசலப்பும் ஏற்படவில்லை. அமைதியாக எந்த சலசலப்பும் இல்லாமல், நீரோடை போகிற மாதிரி செல்கிறது.

கேள்வி : - அ.தி.மு.க.பா.ஜனதா கூட்டணி முறிவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்கள் உண்மையிலேயே பிரிந்துவிட்டார்களா? அல்லது நாடகமா? என்பது காலப்போக்கில் தான் தெரியும்.

கேள்வி : - வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் துரை வைகோ போட்டியிட வாய்ப்புள்ளதா?

பதில்: அதுபற்றி நாங்கள் இன்னும் பேசவே இல்லை.

கேள்வி : - தொகுதி மறுவரையறை செய்யும்போது தமிழ் நாட்டின் எம்.பி. தொகுதி எண்ணிக்கை குறைய வாய்ப்பு உள்ளதா?

பதில்: மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும். நமக்கு 8 எம்.பி. குறையலாம். ம.பி., உ.பி. மாநிலங்களில் அதிகமாகக் கூடும். அப்படி வரும் போது, இந்தியாவின் மொத்த வரைபடத்தில் நம்முடைய எண்ணிக்கை குறையும்போது, அதனுடைய விளைவுகள் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விரோதமாக இருக்கும்.

இந்தியா என்கிற ஒரு அமைப்பு, ஒரு நாடு, இன்றைக்கு இருக்கக்கூடிய நினைப்பு போய்விடும். அதனுடைய விளைவுகள் எல்லா மாநிலங்களிலும் எதிர்விளைவுகள் ஏற்படும். மிகப்பெரிய சோதனையில் போய் முடியும்.

கேள்வி : - காவிரி பிரச்சினையில் கர்நாடகாவில் காங்கிரஸ் உள்பட எல்லாருமே ஒன்று சேர்ந்து தண்ணீர் திறந்துவிட எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்களே?

பதில்: உச்சநீதி மன்றமும் தண்ணீர் கொடுக்க தீர்ப்பு சொல்லிவிட்டது. ஒழுங்காற்று குழுவும் சொல்லிவிட்டது. அவர்களுக்கு வேறு வழியில்லை. அதனால் சாலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி : - முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் படத்தை அங்கு அவமரியாதை செய்கிறார்களே?

பதில்: நாம் அமைதியாக இருக்கிறோம். நம் பக்கம் நியாயம் இருக்கிறது. நம் பக்கம் உச்சநீதி மன்றம் உள்ளது. அதனால் அமைதியாக இருக்கிறோம்.

கேள்வி : - 'இந்தியா' கூட்டணியில் இருக்கக்கூடிய கட்சிகள் தமிழ்நாட்டில் தொடருதா?

பதில்: ஆமாம். கூட்டணியில் தொடருகிறோம்.

கேள்வி :- திருமாவளவன் உள்ளிட்ட அனைவரும் ஒற்றுமையாக கூட்டணியில் இருக்கிறார்களா?

பதில்: எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்.

கேள்வி : - திருமாவளவனுக்கு அ.தி.மு.க. தரப்பில் தூது விடுவதாக சொல்கிறார்களே?

பதில்: அதுமாதிரி இல்லை. தமிழ்நாட்டைப் பொருத்தவரை இந்தக் கூட்டணியில் எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

இவ்வாறு வைகோ கூறினார்.

### தமிழ்நாட்டில் இதுவரை ரூ.3.75 கோடி செலவில்

# 1,32,500 கர்ப்பிணிகளுக்கு சமுதாய - வளைகாப்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப். 28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.09.2023), சென்னை, சைதாப்பேட்டையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடத்தப்பட்ட சமுதாய வளைகாப்பு விழாவில், கர்ப்பிணிப் பெண்களுக்கு. சீர் வரிசைகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் கர்பிணித் தாய்மார்களின் நலன் காக்கவும், தாய் சேய் நலனை மேம்படுத்துவதற்கும், சமுதாய வளைகாப்பு எனும் சமுதாய விழிப்புணர்வு தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் நேற்று சைதாப்பேட்டையில் 200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இது வரை ரூ.3.75 கோடி செலவில் 1,32,500 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

**உடல் உறுப்பு தானம் - அரசு மரியாதை:**

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 23.09.2023 அன்று உடல் உறுப்பு தான தினம் நடத்தப்பட்டது. கடந்த மாத்திற்கு முன்னாள் ஒன்றிய அரசின் *National Organ and Tissue Transplantation Organisation (NOTTO)* எனும் அமைப்பின் மூலம், தமிழ்நாடு மாநிலத்திற்கு உடல் உறுப்பு தானத்தில் சிறப்பாக செயல்பட்டதற்கான விருது வழங்கப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கான ஆகிய மாநிலங்கள் லட்சத்தீவு, அந்தமான், புதுச்சேரி ஆகிய யுனியன் பிரதேசங்கள் இணைந்து செயல்படும் *South Organ and Tissue Transplantation Organisation* (SOTTO) எனும் அமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் மூளைச்சாவு அடைந்து, உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு சார்பில் மரியாதை செய்யப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த வகையில் நேற்றைக்கு முன்தினம் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த வடிவேலு என்பவர் விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த நிலையில் அவரது துணைவியார், சகோதரி, தாய் ஆகியோர்கள் அவரது உடல் உறுப்புகளை தானமாக வழங்க முன்வந்தனர். அதனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை செயல்படுத்தும் விதமாக சின்னமனூர் எனும் கிராமத்திற்கு சென்று அவரது உடலுக்கு நானும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அடங்கிய குழுவும் அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. அரசு மரியாதை என்றால் அரசு உயர் அலுவலர்களின் உடலுக்கு செலுத்தும் துப்பாக்கி குண்டுகள் முழங்கும் படி செய்யும் மரியாதை கிடையாது, அரசு சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ, துணை மாவட்ட ஆட்சியர் அவர்களோ, வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களோ யாராவது இறந்தவரின் உடலுக்கு செலுத்தும் மரியாதை ஆகும்.

இன்று திருச்சியில் உக்கரை பகுதியை சேர்ந்த பாபுபிச்சை மற்றும் மேலப்புதூர் பகுதியை சேர்ந்த அருட்தந்தை பிரான்ஸிஸ் சேவியர் ஆகியோர்கள் மூளைச் சாவு அடைந்துள்ளதால் அவர்களுடைய உடல் உறுப்புகளை கொடையாக வழங்க முன்வந்துள்ளார்கள். அவர்களுடைய உடல்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசு மரியாதை செலுத்தியுள்ளார்.

சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டு வருகிறது, விரைவில் 200 கட்டண படுக்கைகள் (*Pay Wards*) உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. டெங்கு உள்ளிட்ட நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது, எனவே பொது மக்கள் இது குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை. மேலும் 1.10.2023 அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் டெங்கு உள்ளிட்ட மழைக்கால நோய்களுக்கான சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு "தமிழகத்தை கண்டு மகிழ்வோம் 2023 (Discover Tamil Nadu2023) என்ற சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பயணத்தையொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சமூக ஊடகவியலாளர்களுக்கு தமிழ்நாட்டின் சிறப்புகள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப்நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி, 31 வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் 31 வது வட்டக் கழகச் செயலாளர் டி.எம்.ஜோசப் தலைமையில் நடைபெற்றது. கே.சந்திரன், மு.ஸ்ரீதர், இரா.குமரேசன், இரா.பாபுஜி, ஏ.சேகர் மற்றும் பலர் முன்னிலை வகித்தனர். பகுதிச் செயலாளர் த. ஜெயக்குமார், துணை மேயர் கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர் சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் வரவேற்றனர். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் குத்தாலம் அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, வே.கருணாநிதி, இரவி. நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், சத்தியபிரபு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆர்.முரளிதரன், வி.கோதண்டராமன், வி.கௌதம், பி.கார்த்திக், ஆர்.ஜனார்த்தனன் ஆகியோர் நன்றி கூறினர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் சேலம், அழகாபுரம் மத்திய கூட்டுறவு சமுதாய கூடத்தில் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வங்கிப் பற்று அட்டைகளை நேற்று (27.09.2023) வழங்கினார்கள். உடன், அரசுச் செயலாளர் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை டாக்டர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதம் சிகாமணி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று 27.09.2023 சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப் பதிவு, ஓட்டுநர் உரிமம் தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்தபிறகு, வாகனப் பதிவு மற்றும் ஓட்டுநர் உரிமத்திற்காக விண்ணப்பிக்க வந்த பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் தலைமைக் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆ.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரும் தூண்டுகோலாக அமையும்!

## சேலத்தில் வங்கிப் பற்று அட்டைகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சேலம், செப்.28-**

**'கலைஞர்' மகளிர் உரிமைத் திட்டம் பெண்களின் முன்னேற்றத்துக்கு பெரும் தூண்டுகோலாக அமையும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம், அழகாபுரத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நேற்று (27.09.2023) கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கிப் பற்று அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சியில் 500 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகள் வழங்கினார். இந்நிகழ்வு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் வங்கிப் பற்று அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இன்றையதினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக 500 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகள் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 1.06 கோடி மகளிர் பயன்பெற்றுள்ளனர். இதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 5.17 இலட்சம் மகளிர் பயன்பெற்றுள்ளனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சென்னைக்கு அடுத்து அதிகளவிலான மகளிர் சேலம் மாவட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.

### நாடே வியந்து பாராட்டும் திட்டம்!

எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள இந்த முற்போக்குத் திட்டத்தினை இந்திய ஒன்றியமே வியந்து பாராட்டுகிறது. மிகக் குறுகிய நாட்களில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1.06 கோடி மகளிருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் 500 மகளிருக்கு வழங்கப்படும் வங்கிப் பற்று அட்டைகள் பணத்தை மட்டுமே எடுப்பதற்கான கார்டுகள் அல்ல, தங்கள் வாழ்க்கையை மாற்றப் போகும் துருப்புச் சீட்டுகளாகும். இத்திட்டம் கர்நாடகா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் செயல்படுத்தும் வகையில் முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது. பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் அவர்கள் கண்ட கனவுகளுக்கு தமிழ்நாடு அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது.

பெண்களின் முன்னேற்றமானது கலாச்சார ரீதியாகவும், சட்ட ரீதியாக வும், பொருளாதார ரீதியாகவும் தடுக்கப்பட்டுள்ளதால், இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் பெண்கள் சுதந்திரமாக வாழமுடியும் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறினார்கள். கலாச்சார ரீதியான தடைகளாக பணக்காரன், ஏழை, மேல் சாதி, கீழ் சாதி, முதலாளி, தொழிலாளி அடிமைத்தனத்தை விட ஆண், பெண் அடிமைத்தனம் கொடுமையானது என்று தந்தை பெரியார் அவர்கள் கூறினார். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கும், படிப்பதற்கும், வேலை பார்ப்பதற்கும் அனுமதி இல்லாமல் குடும்பத்தை கவனித்துக் கொள்வதற்கு மட்டுமே இருந்தது. இவற்றை உடைத்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்து வருகிறோம்.

### முத்தாய்ப்பான திட்டம்!

மேலும், தந்தை மற்றும் பாட்டனார் சொத்தில் பெண்களுக்கு உரிமை இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்ட ரீதியாக தந்தை சொத்தில் பெண்களுக்கு உரிமை உண்டு என்று சட்டத்தை நிறைவேற்றி பெண்களுக்கு சொத்தில் சம உரிமை பெற்றுத் தந்தார்கள். அதேபோல், பொருளாதார ரீதியாக பெண் சிறுமியாக இருக்கும்போது தாய் தந்தையையும், வளர்ந்த பின் தனது கணவரையும், வயது முதிர்ந்த காலத்தில் மகன், பேரன் ஆகியோரையும் சார்ந்து இருக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. இவற்றை நீக்கும் வகையில், புதுமைப் பெண் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் பெண்களின் சிரமம் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் முத்தாய்ப்பான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் திகழ்ந்து வருகிறது. பெண்களின் உழைப்பிற்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அங்கீகாரமே இந்த கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். இதனை உங்கள் சகோதரனாக பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். இதன்மூலம் பெண்கள் கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் உயர முடியும்.

பெண்கள் அதிகளவில் படித்து, முற்போக்காகவும், பகுத்தறிவோடும் சிந்தித்து, சுதந்திரமாக செயல்பட வேண்டும். தந்தை பெரியார் அவர்கள் கூறியது போல் ஒரு தகவலின் உண்மைத் தன்மையை அறிந்து செயல்பட வேண்டும். பொதுவாழ்வில் பெண்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கில் ஊரக மற்றும் நகர்மன்ற உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும் மட்டுமின்றி ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தருவதோடு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோளாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.



சென்னையில் அக்.2 இல் நடைபெறவுள்ள போதை பொருள் ஒழிப்பு மாரத்தான் போட்டியையொட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் Run For Drug Free TN என அச்சிடப்பட்ட டிசார்ட் மற்றும் துண்டு பிரசுரத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.



கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகேயுள்ள பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ளதையடுத்து தயாராகி வரும் மாநாட்டுத்திடலை இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டக்கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி மற்றும் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்களுடன் பார்வையிட்டார். மாநாட்டுத் திடலில் எந்தெந்த இடத்தில் பந்தல் – மேடை – நுழைவு வாயில்கள் – அமருமிடம் – ஓய்விடம் – கழிப்பறை வசதிகள் போன்றவை அமையவுள்ளது என்பது குறித்து கேட்டறிந்தார்.



கிருஷ்ணகிரியில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் விடுதியில் நேற்று முன் தினம் ஆய்வு செய்தார். அது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் அவர் பதிவிட்ட போது, சேலம் அரசு கலைக்கல்லூரி மாணவர்களுக்கான ஆதி திராவிடர் நலத்துறை விடுதியிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென பின்னூட்டமிடப்பட்டது. எனவே, சேலம் அரசு கலை & அறிவியல் கல்லூரி ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் நேற்றிரவு திடீர் ஆய்வு மேற்கொண்ட ஆய்வின் போது, விடுதியில் உள்ள மாணவர்கள் தங்கும் அறை, படிக்கும் அறை, உணவுப் பொருட்கள் அறை, சமையல்கூடம், கழிவறை என ஒவ்வொரு அறையாக சென்று விடுதியில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் தரத்தை உறுதிசெய்ய அவற்றையும் ஆய்வு செய்தார்.



கலைஞர் 100
1924 - 2023
28.09.2023
வியாழக்கிழமை
துறையூர் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று
காவிரி தனி குடிநீர் திட்ட பணிகளுக்கு ரூ.108.90 கோடி ஒதுக்கீடு செய்த
தமிழகத்தின் விடிவெள்ளி
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு
நன்றி! நன்றி!! நன்றி!!!
காவிரி தனி குடிநீர் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்ட வருகை தரும்
மாண்புமிகு கே.என்.நேரு அவர்களை
(கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்)
வருக! வருக!! என அன்புடன் வரவேற்று, இந்த குடிநீர் திட்டத்திற்கு
முதல்வரிடம் பரிந்துரை செய்தமைக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த
நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
ந. தியாகராஜன் MA., MLA.,
வடக்கு மாவட்ட செயலாளர்
செ.ஸ்டாலின்குமார்
துறையூர் சட்டமன்ற உறுப்பினர்
தர்மன் ராஜேந்திரன்
வடக்கு மாவட்ட பொருளாளர்
திருச்சி மாவட்ட
ஊராட்சி குழுத்தலைவர்
மெடிக்கல் ந. முரளி
துறையூர் நகர செயலாளர்
திருச்சி மாவட்ட
அறங்காவலர் குழு தலைவர்
இள. அண்ணாதுரை
துறையூர் மத்திய
ஒன்றிய செயலாளர்
செல்வராணி மலர்மன்னன்
துறையூர்
நகர்மன்ற தலைவர்
சிவ.சரவணன்
துறையூர் கிழக்கு
ஒன்றிய செயலாளர்
M.வீரபத்திரன்
துறையூர் மேற்கு
ஒன்றிய செயலாளர்
சரண்யா மோகன்தாஸ்
துறையூர்
ஒன்றிய குழு தலைவர்
துறையூர் நகர ஒன்றிய தி.மு.க. - திருச்சி வடக்கு மாவட்டம்


28.09.2023
வியாழக்கிழமை
ஜமீன்தார் மேல்நிலைப்பள்ளி
மைதானம், துறையூர்
கலைஞர்
100
1924 - 2023
துறையூர் நகர மக்களுக்காக காவிரி தனி குடிநீர் திட்ட பணிகளுக்கு
ரூ.108.90 கோடி ஒதுக்கீடு செய்த
பசுமை புரட்சி நாயகர்
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு
நன்றி! நன்றி!! நன்றி!!!
காவிரி தனி குடிநீர் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்ட வருகை தரும்
மாண்புமிகு கே.என்.நேரு அவர்களை
(கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்)
வருக! வருக!! என்று வரவேற்பதோடு, இந்த திட்டத்திற்கு
முதல்வரிடம் பரிந்துரை செய்தமைக்கு எங்கள் நெஞ்சார்ந்த
நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
ந. தியாகராஜன் MA., MLA.,
வடக்கு மாவட்ட செயலாளர்
தர்மன் ராஜேந்திரன்
வடக்கு மாவட்ட பொருளாளர்
திருச்சி மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர்
மெடிக்கல் ந. முரளி
துறையூர் நகர செயலாளர்
திருச்சி மாவட்ட அறங்காவலர் குழு தலைவர்
இள. அண்ணாதுரை
துறையூர் மத்திய ஒன்றிய செயலாளர்
துறையூர் நகர ஒன்றிய தி.மு.க. - திருச்சி வடக்கு மாவட்டம்


என்றென்றும்
கலைஞர்
100
1924 - 2023
தி.மு. கழக மாநில ஆதி திராவிட நலக்குழு மற்றும்
சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு
மத்திய மண்டலம் சார்பாக
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
மாபெரும் பட்டி மன்றம்
நாள் : 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 1.00 இடம் : கலைஞர் அறிவாலயம், விழுப்புரம்
பட்டி மன்ற தலைமை
ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை பெற்றுதந்தது டாக்டர் கலைஞரின் அரசியல் பணியா! கலை இலக்கிய பணியா!
பட்டி மன்ற நடுவர் கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர்
அரசியல் பணியே கவிஞர் இனியன்
திருமதி நாகநந்தினி
கலை இலக்கிய பணியே பேராசிரியர் விஜயக்குமார்
கடலூர் தணிகைவேலன்
சிறப்பு விருந்தினர்
முனைவர் மாண்புமிகு க.பொன்முடி M.A.,Phd.,B.L.,
உயர்கல்வி துறை அமைச்சர், கழக துணை பொதுச்செயலாளர்
அந்தியூர் செல்வராஜ் M.P.,
முன்னாள் அமைச்சர், கழக துணைப்பொதுச்செயலாளர்,
M.R.K.பன்னீர்செல்வம்
மாண்புமிகு மேலாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்.
எ.வ.வேலு
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
செஞ்சி K.S.மஸ்தான்
மாண்புமிகு சிறுபான்மை நலன் (ம) வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்.
கயல்விழி செல்வராஜ் M.A.,B.Ed.,
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
C.V.கணேசன் M.A.,B.Ed.,B.L.,
மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர்
மா.மதிவேந்தன் MBBS.,MD
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
முனைவர் T.R.B.ராஜா
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர். கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
ர.சுபேதார்கான்
மாநில தலைவர், சிறுபான்மை நல உரிமைக்குழு
தலைமை : ஆ.கிருஷ்ணசாமி M.A.,B.L.,MLA
ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர்
முன்னிலை : நா.புகழேந்தி MLA
விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
பட்டி மன்றத்தை துவக்கி வைப்பவர்
டாக்டர் பொன்.கௌதமசிகாமணி MS(Ortho) MP
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்
வரவேற்று மகிழும்
மருதூர் ஏ.இராமலிங்கம் Ex.MLA
ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்
வி.பி.இராசன்
ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர்
தீப்பம்பட்டி ஆறுச்சாமி
ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர்
எஸ்.மாரியப்பன்கென்னடி
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
பி.துரைசாமி
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
ஊட்டி மு.பொன்தாஸ்
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
சென்னை சி.தசரதன்
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
மு.பரமானந்தம்
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
அரூர் சா.இராஜேந்திரன்
ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
அழைத்து மகிழும்
செ.புஷ்பராஜ் B.Sc.,Ex.MLA
மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்
முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர்
விழுப்புரம் தெற்கு மாவட்டம்.
தி.மு.கழக மாநில ஆதி திராவிட நலக்குழு & சிறுபான்மை நல உரிமைக்குழு பிரிவு

தமிழ் இதழியலின் முன்னோடி – தமிழ்ச் சமுதாயத்துக்கு

# சி.பா.ஆதித்தனாரின் பணியை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!

119வது பிறந்த தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 28–

தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



தமிழ் இதழியலின் முன்னோடி சி.பா.ஆதித்தனார்

அவர்களது 119 ஆவது பிறந்தநாளில் தமிழ்ச் சமுதாயத்துக்காக அவர் ஆற்றிய பணிகளையும் – தமிழ் இதழியலுக்கு அவர் அளித்த பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் கனமழை!

சென்னை, செப். 28 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: தமிழக கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், ராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில்ஓரிருஇடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.




சீர்மிகு நகர திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களுக்கு, ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தினால் வழங்கப்படும் விருதுகளில், இந்தியாவின் இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கான விருதினை செப்டம்பர் 27, 2023 நேற்று மத்தியப்பிரதேசத்தின் இந்தூரில் நடந்த விழாவில், குடியரசுத்தலைவரிடமிருந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் பெற்றுக் கொண்டார்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அதிக அளவில்

# தமிழ்நாட்டில் சுற்றுலா பயணம் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை, செப். 28-

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு "தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2023 (Discover Tamil Nadu-2023)" என்ற சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பயணத்தையொட்டி, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சுற்றுலா பேருந்தை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.



தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை வெளிமாநிலத்தவர்கள் அறிந்து, தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்களை பார்வையிட வரவழைக்க செய்வதற்காக வெளிமாநிலங்களில் அதிக அளவில் பார்வையாளர்களை கொண்ட சமூக வலைதள ஊடகவியலாளர்களை தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்து மூலம் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக சுற்றுலா தினத்தையொட்டி நேற்று (27.9.2023) சென்னை தீவுத்திடல் டிரைவ் இன் ஓட்டல் வளாகத்தில் "தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2023 (Discover Tamil Nadu-2023)" என்ற சமூக ஊடகவியளாளர்கள் சுற்றுலா பயண தொடக்க நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப்நந்தூரி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தமிழ்நாடு சுற்றுலா சிறப்புகள் குறித்து கையேடுகள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தாவது,

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத் துறையில் முதன்மை மாநிலமாகவும், உலக வரைபடத்தில் சுற்றுலா பயணிகளின் விருப்பமாக இடமாக தமிழ்நாட்டை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகள் குறித்து தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சமூக ஊடக வலைதளங்களான யூ டியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்டவற்றில் புகைப்படங்கள், வீடியோக்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை பேஸ்புக் பக்கத்தை 1,78,000 நபர்களும், இன்ஸ்டாகிராம் பக்கத்தை 89,500 நபர்களும், எக்ஸ் பக்கத்தை 76,600 நபர்களும், யூ டியூப்-ஐ 11,100 நபர்களும் பின்தொடர்ந்து சுற்றுலாத் தலங்கள், விழாக்கள், திருவிழாக்கள் குறித்த தகவல்களை அறிந்து வருகின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாமல்லபுரத்தில் பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தியதுடன், தொடக்க விழா மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளை உலகின் பல்வேறு புகழ் வாய்ந்த விளையாட்டு போட்டிகளுக்கு இணையாக நடத்திக் காட்டி, மாமல்லபுரத்தினை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் விருப்பமிகு சுற்றுலாத் தலமாக உருவாக்கினார்கள். மேலும் விளையாட்டுத் துறை அமைச்சர் மாமல்லபுரத்தில் சர்வதேச அலைச்சறுக்கு (சர்ப்பிங்) விளையாட்டு போட்டிகளை நடத்தியுள்ளார்கள்.

கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஜூலை மாதம் வரை 7 மாத காலத்தில் மட்டும் 6,42,379 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் ஜூலை மாதம் வரை 7 மாத காலத்தில் 16,70,59,561 என உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில் முட்டுக்காடு, உதகமண்டலம், பைக்காரா, முதலியார் குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது. இங்கு வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2022 - 2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 42,22,945 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை 5 மாதங்களில் மட்டும் மொத்தம் 24,17,436 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் மற்றும் வெளிநாடுகளிலும் சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டில் சுற்றுலா பயணம் மேற்கொள்ள வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சீர்மிகு நகர விருது போட்டி

# இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடம்!

## ஒன்றிய அரசு விருது வழங்கி பாராட்டு!

புதுடெல்லி, செப்.28-

சீர்மிகு நகர திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களுக்கான ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தினால் வழங்கப்படும் விருதுகளில், தமிழ்நாட்டிற்கு இந்திய அளவில் இரண்டாவது சிறந்த மாநிலத்திற்கான விருதும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளுக்கு சிறந்த மாநகரங்களுக்கான விருதும் வழங்கப்பட்டுள்ளன.

நகர்ப்புர பகுதிகளில் முக்கிய உட்கட்டமைப்பை வழங்குவது, சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவது உள்ளிட்ட நோக்கங்களுடன் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் சீர்மிகு நகரத் திட்டம், ஜூன்,

2015இல் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில், சென்னை, கோவை, மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகள் சீர்மிகு நகரங்களாகத் தேர்வு செய்யப்பட்டன.

சீர்மிகு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் முன்னோடி நகர உத்திகள், திட்டங்கள் மற்றும் புதுமையான யோசனைகளை அங்கீகரித்து வெகுமதி அளிக்கும் நோக்கத்துடன் ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் இந்திய சீர்மிகு நகர விருது போட்டி (Indian Smart Cities Award Contest) ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டியின் கீழ், பல்வேறு கருப்பொருள்கள் மற்றும் அளவுருக்களின் அடிப்படையில் சிறந்த மாநிலம் மற்றும் நகரங்களை ஒன்றிய அரசு அங்கீகரித்து விருது அளிக்கிறது.

சீர்மிகு நகர திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்கள் மற்றும் நகரங்களுக்கான 2022ஆம் ஆண்டிற்கான இந்திய சீர்மிகு நகர விருது போட்டியில் இந்திய அளவில், தமிழ்நாடு இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவின் அனைத்து சீர்மிகு நகரங்களுக்கு இடையேயான போட்டியில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தென் மண்டல அளவிலான நிதி மற்றும் செயல்திறனில் முதல் இடத்திற்கான விருது மற்றும் மாதிரி சாலைகள், ஏரிகள் புனரமைப்பிற்காக இந்திய அளவில் முதல் இடத்திற்கான விருது; கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மறு சீரமைப்பு மற்றும் நகரத்தின் அடையாளத்தை மேம்படுத்தும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தஞ்சாவூர் மாநகராட்சிக்கு இந்திய அளவில் மூன்றாவது இடத்திற்கான விருது; மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்கான டிஜிட்டல் தொழில்நுட்பங்களை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தூத்துக்குடி மாநகராட்சிக்கு இந்திய அளவில் மூன்றாவது இடத்திற்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டிற்கான இந்திய சீர்மிகு நகர திட்ட விருது போட்டியில், இந்தியாவின் இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கான விருதினை, நேற்று (27-9-2023) மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் நடைபெற்ற விழாவில், குடியரசுத் தலைவரிடமிருந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர், முனைவர். தா.கார்த்திகேயன், பெற்றுக்கொண்டார். மேலும், சிறந்த சீர்மிகு நகரங்களுக்கான விருதுகளை மாநகராட்சியின் மேயர்கள் மற்றும் அதிகாரிகள் பெற்றுக்கொண்டனர்.

# குடிநீர் கட்டணம் செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் கட்ட வேண்டும்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, செப்.28-

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியினையும், குடிநீர் கட்டணங்களையும் கடைசி நாளான செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் செலுத்தி மேல்வரியினை தவிர்த்திட வேண்டுமென

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கேட்டுக்கொள்கிறது.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அனைத்து வேலை நாட்களிலும், சனிக்கிழமைகளிலும் இயங்கும் என தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை அலுவலகங்களில் காசோலை/ வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.


நுகர்வோர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் கட்டண நுழைவாயிலைப் (online Gate Way) பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக பணம் செலுத்தலாம். இசேவை மையங்கள் மற்றும் UPI, QR குறியீடு, PoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 30.09.2023க்குள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம், கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சியில் பூத் நிலை முகவர்கள் (பி.எல்.ஏ2) கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்சியில் மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கபட்ட பிரதிநிதி எஸ்.அஸ்கர்அலி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் வள்ளி எட்டியப்பன், கிளை கழக செயலாளர்கள் எம்.சௌந்தரபாண்டியன், பி.குணசேகரன், கோ.சகதேவன், ஆர்.ரியாஸ், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




காரைக்கால் வடக்கு தொகுதி காரைக்கால் மேடு பகுதியில் இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு நடைபெற்றது. காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ. தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.நாக தியாகராஜன் எம்.எல்.ஏ. முன்னிலையில் காரைக்கால் இளைஞர் அணியின் அமைப்பாளர் ஐ.முஹம்மது ரிஃபாஸ் முன்னிலையிலும் காரைக்கால் இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் வி.வெற்றிச்செல்வன் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் தங்களை திமுக இளைஞர் அணியில் ஆர்வமாக இணைத்துக் கொண்டனர். மேலும் இந்த நிகழ்வில் மாநில மீனவர் அணி அமைப்பாளர் வீரதாஸ், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.சுரேஷ் ரூபன், ஏ.ராம் பிரசாத், வடக்கு தொகுதியின் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், ஆனந்தம் மயில், பாலமுத்து ஆகியோர்கள் மேலும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம், சின்னக்காம்பட்டி கிளைக் கழகச் செயலாளர் ரா.மணி (எ) கிருஷ்ணசாமி அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.9.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருச்சி மத்திய மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ஜான்சன்குமார் அவர்கள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 27.9.2023

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தஞ்சை பொன்.தருமராஜன்

செப்டம்பர் 28 (1989)



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தஞ்சை நகரத்தில் வட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து போட்டியிட்டவரிடம் பணியாற்றி வந்த இவர், தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, கலைஞர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

தஞ்சை நாட்டு செக்கு தொழிலாளர் சங்க தலைவராகவும், மாவட்ட சினிமா ஆபரேட்டர்கள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தண்டலம் ஊராட்சியில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.காந்தி, இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் வி.பி.கலைராஜன், நந்தனம் நம்பிராஜன்,மற்றும் இ.ஏ.பி.சிவாஜி,ஜெ.மூர்த்தி, மு.பகலவன்,மு.கதிரவன்,எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ்,ஏ.வி. ராம்மூர்த்தி,டாக்டர் பரிமளம் விஷ்வநாதன், கே.சுப்பிரமணி சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், ஆ.சத்யவேல், ஜான் (எ) பொன்னுசாமி, ஜி.இரவிக்குமார், பி.முத்து, அபிராமி குமாவேல், கே. வி.லோகேஷ், வி.பி.இரவிக்குமார், க.சம்பத், கோல்டு மணி, வர்த்தகர் அணி பா.தனசேகரன், சி.சுமன், ஜெயலலிதா, இலக்கிய அணி நிர்வாகிகள் ஆத்துப்பாக்கம். வெ.அரிதாஸ், ப.முல்லைவேந்தன், ஜெ.ஜோதிமுருகன், ஜி.கஜேந்திரன்,கு.நாகராஜ், எஸ்.முனுசாமி,அக்கரை ஆர்.ரஞ்சித்.புதுவாயல் இ.எம். ராஜேஷ், தண்டலம் டி.ரவி, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.09.2023), சென்னை, சைதாப்பேட்டையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடத்தப்பட்ட சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர் வரிசைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், மோகன்குமார், மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.மு.கிருஷ்ணவேணி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சுற்றுலாத் துறையில்

# சிறப்பாக செயல்பட்ட நிறுவனங்களுக்கு விருது!

## அமைச்சர்கள் வழங்கினர்!

சென்னை,செப்.28-

சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 54 தொழில் நிறுவனங்கள், அரசுத் துறைகள், சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கினார்கள்.

சென்னை கலைவாணர் அரங்கில் உலக சுற்றுலா தினத்தையொட்டி தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2023 வழங்கும் விழா சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர். க.மணிவாசன். தலைமையில் நேற்று (27.09.2023) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 54 தொழில் நிறுவனங்கள், ஓட்டல்கள், டிராவல் நிறுவனங்கள், அரசுத்துறைகள் உள்ளிட்ட சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கினார்கள். தொட ர்ந்து சுற்றுலா வழிகாட்டிகளுக்கான நெறிமுறைகள் பதிவுத்திட்டம் - 2023 மற்றும் சுற்றுலா சேவை வழங்குபவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம் ஆகிய திட்டங்களை தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி முன்னிலை வகித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறையும், Global Media Boxம் இணைந்து சுற்றுலா தொடர்பான சிறந்த புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கான WoW தமிழ்நாடு போட்டியில் வெற்றி பெற்ற 24 நபர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார்கள்.

மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தி இந்து நிறுவனம், மெட்ராஸ் போட்டோ பிளாக்கர்ஸ் ஆகியோர் இணைந்து நடத்திய புகைப்பட போட்டியில் வெற்றி பெற்ற 5 நபர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.கமலா மற்றும் சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மருத்துவ மாணவர்கள் சார்பில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

# நீட் தேர்வில் கட் ஆஃப் மதிப்பெண் ஜீரோவாக குறைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு!

## ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, செப்.28 - நீட் முதுநிலை தேர்வில் கட் ஆஃப் மதிப்பெண் ஜீரோவாக குறைக்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கில், ஒன்றிய அரசுக்கு டெல்லி உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கு நீட் தகுதித் தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. அதன்படி, நீட் முதுநிலை தேர்வில், ஒவ்வொரு பிரிவினருக்கும் கட் ஆஃப் மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நீட் முதுநிலை தேர்வில் தகுதி மதிபெண் ஜீரோவாக குறைக்கப்படுவதாகவும், ஜீரோ மதிப்பெண் எடுத்திருந்தாலும் எம்.டி, எம்.எஸ். படிப்புக்கான கலந்தாய்வில் பங்கேற்கலாம் என்றும் ஒன்றிய அரசு அண்மையில் அறிவித்தது. இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், ஒன்றிய அரசின் இந்த முடிவை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

மருத்துவ மாணவர்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்கை டெல்லி உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, பூஜ்யம் பெர்சண்டைல் ஆக குறைத்துள்ளது என்பது மைனஸ் 40 மதிப்பெண் பெற்றிருந்தாலும் கலந்தாய்வில் கலந்து கொள்வது ஆகும் என்று மாணவர் தரப்பில் வாதிடப்பட்டது. இதனால் நீட் பிஜி தேர்வின் அவசியமே இல்லை என்ற நிலை எழுந்துள்ளதாகவும் ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு நீட் தேர்வின் நோக்கத்தையே சிதைத்துள்ளதா தாகவும் மாணவர்கள் தரப்பு வழக்கறிஞர் குற்றம் சாட்டினர். இதையடுத்து, அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பாக ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தர விட்டனர்.

**கட் ஆஃப் மதிப்பெண் ஜீரோவாக குறைப்பு!**

ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் பூஜ்யம் பெர்சன்டைல் ஆக குறைத்துள்ளது என்பது மைனஸ் 40 மதிப்பெண் பெற்றிருந்தாலும் கலந்தாய்வில் கலந்து கொள்வது ஆகும். மாணவர் தரப்பு வழக்கறிஞர் ஒன்றிய அரசின் அறிவிப்பு நீட் பிஜி தேர்வின் அவசியமே இல்லை என்ற நிலை எழுந்துள்ள ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு நீட் தேர்வின் நோக்கத்தையே சிதைத்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக ஒன்றிய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தர விட்டுள்ளது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட மருத்துவ அணி சார்பில் ஆவடிமாநகராட்சிசேக்காடுஅண்ணாநகர்பகுதியில் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளரும் மாமன்ற உறுப்பினருமான டாக்டர் க.ராஜேஷ்குமார் ஏற்பாட்டில்பொது மக்களுக்கானஇலவச மருத்துவ மையம் துவக்க விழா நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர்எம்.எல்.ஏ தலைமை தாங்கி மருத்து மையத்தை திறந்து வைத்து வழங்கப்படும் பொது சிகிச்சை மருத்துவ முகாமை பார்வையிட்டார் அருகில் மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமிநாராயணபிரசாத், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்ததை கே.ஜெ.ரமேஷ், பகுதி கழகச் செயலாளர்கள்ஜி.நாராயண பிரசாத், ஆவடி ஜி.ராஜேந்திரன், ஒன்றிய நகர செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் விஜயலட்சுமி, வட்டக் கழகச் செயலாளர்கள் பன்னீர்செல்வம், வழக்கறிஞர் ரவிக்குமார், கவுன்சிலர் வீரபாண்டியன், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மணிப்பூர் மாநிலம் போர்க்களமாக மாறியுள்ள நிலையில்

# பிரதமர் மோடி ஊர் சுற்றிக் கொண்டிருப்பது வேதனையளிக்கிறது!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சனம்!



புதுடெல்லி, செப். 28 - 5 மாதங்களாக மணிப்பூர் மாநிலம் போர்க்களமாக மாறியுள்ள நிலையில், பிரதமர் மோடி ஊர் ஊராக சுற்றிக் கொண்டிருப்பதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,

மணிப்பூர் நிலைமையை கட்டுப்படுத்தும் முதல் நடவடிக்கையாக, அம்மாநிலத்தின் திறமையற்ற முதலமைச்சரை முதலில் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகமாகியுள்ளதாகவும், ஜுலை 6 ஆம் தேதி காணாமல் போன இரண்டு மாணவர்களை கொன்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் இம்பாலில் ஏற்பட்ட மோதலில் 45 பேர் காயமடைந்துள்ளதாக சாடியுள்ளார்.

5 மாதங்களாக மணிப்பூர் மாநிலம் போர்க்களமாக மாறியுள்ள நிலையில், பிரதமர் மோடிக்கு ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருப்பது வேதனையளிப்பதாக குற்றம் சாட்டியுள்ள கார்கே, மணிப்பூர் வன்முறையில் மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் கைகளில் ஆயுதம் இருப்பது வெளிப்படையாக தெரிவதாக விமர்சித்துள்ளார்.

மணிப்பூரில் அரங்கேறி வரும் அனைத்து வன்முறை சம்பவங்களுக்கும் பா.ஜ.க.தான் காரணம் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

### உலக வெறிநாய்க்கடி நோய் தினம்!

# வெறி நாய்க்கடி நோய் தடுப்பூசி முகாம்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.28-

உலக வெறிநாய்க்கடி நோய் தினத்தை முன்னிட்டு, வெறிநாய்க்கடி நோய் தாக்கத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவப் பணியாளர்களைப் பாதுகாத்திடும் வகையில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாமினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (27.09.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா பேசும்போது தெரிவித்ததாவது :-

ரேபிஸ் நோய் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், நோய் பாதித்த நபர் மற்றும் அவரின் குடும்பத்தை எவ்வாறு பாதிக்கும் என்றும், தடுப்பூசி போடுவதன் முக்கியத்துவம் குறித்தும், நாய் கடித்தால் மட்டுமே ரேபிஸ் பரவும் என்றில்லாமல், என்னென்ன விலங்குகள் கடித்தால் ரேபிஸ் பரவும் என்று இன்று சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது.

நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தவுடன் அதற்கான தடுப்பூசி மற்றும் சிகிச்சையை உடனடியாக மேற்கொண்டால் மட்டுமே இந்த நோய்க்கான தீர்வினைக் காணமுடியும். இதுகுறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடும் வகையில் தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவப் பணியாளர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில், பணியில் ஈடுபடும் போது சிறு கீறல் ஏற்பட்டாலும் அதன் மூலம் ஏற்படும் நோய் தாக்கத்தினால் நீங்கள் பாதிக்கப்படுவதுடன் உங்களது குடும்பமும் பாதிக்கப்படும் என்பதால், கட்டாயமாக கையுறைகளை அணிந்து, அவரவருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து உபகரணங்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நாய் பிடிக்கும் பணிகளில் ஈடுபடும் பொழுது வழங்கப்பட்டுள்ள சீருடைகளைக் கட்டாயம் அணிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தெருநாய்கள் மூலம் வெறிநாய்க்கடி நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில், புளியந்தோப்பு, சோழிங்கநல்லூர், மீனம்பாக்கம், கண்ணம்மாபேட்டை மற்றும் லாயிட்ஸ் காலனி ஆகிய 5 நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்களும், திரு.வி.க.நகர், நுங்கம்பாக்கம், கண்ணம்மாபேட்டை மற்றும் மீனம்பாக்கம் ஆகிய 4 செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தெருநாய்கள் குறித்து பொதுமக்கள் அளிக்கும் புகாரின் அடிப்படையிலும், நாய்கள் தொல்லை அதிகம் உள்ள இடங்களிலும் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, அவற்றிற்கு அனுபவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் மூலம் அவற்றிற்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை முடிந்து குணமடைந்த பின்னர் நாய் இனக்கட்டுப்பாட்டு விதி 2023ன்படி அவைகள் மீண்டும் பிடித்த இடங்களிலேயே விடப்படுகின்றன.

மேலும், தெருநாய்கள் குறித்து மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 16 தெரு நாய்கள் பிடிக்கும் வாகனங்களும், ஒவ்வொரு வாகனத்திலும் நாய் பிடிக்கும் வலைகளுடன் 5 நாய் பிடிக்கும் பணியாளர்கள் மூலமாக நாய் இனக்கட்டுப்பாட்டு விதிகள் 2023ன்படி மனிதாபிமான முறையில் நாய் பிடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 23,516 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செல்லப்பிராணிகளுக்கு பொதுவாக ஏற்படும் அனைத்து வகை நோய்களுக்கும் இலவசமாக சிகிச்சை வழங்கப்படுவதுடன், உடல்நலக் குறைவு ஏற்படாத வகையில் தடுக்க கால்நடை உதவி மருத்துவர்களால் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை (Rabies free Chennai) என்ற இலக்கினை அடையும் பொருட்டு, செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முற்றிலும் இலவசமாக செலுத்தப்படுகிறது.

நாய் கடித்தால் தான் வெறிநாய்க்கடி நோய் தொற்று ஏற்படும் என்பது இல்லை. நம் உடலில் சிறு கீறல் இருந்து அதில் பாதிக்கப்பட்ட நாயின் உமிழ்நீர் பட்டாலும் வெறிநாய்க்கடி நோய் தாக்கும். நாயினால் கடிபட்டவர் உடனடியாக கடிபட்ட இடத்தை சோப்புப் போட்டு சுத்தமான குழாய் நீரால் 15 நிமிடங்கள் கழுவிய பின்னர் உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்குச் சென்று உரிய சிகிச்சையினை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின் படி, செல்லப்பிராணிகள் வளர்க்கும் உரிமையாளர்கள் அதற்கான உரிமம் (Pet License) பெற்றிருக்க வேண்டும். இதற்கென மேற்கண்ட மையங்களிலும், இணையதளம் வாயிலாகவும் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் ரூ.50/ என்ற கட்டணத்தில் வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கும் வகையில் வழங்கப்படுகிறது. வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்ட பிறகே நாய்களுக்கு உரிமம் வழங்கப்படுவதால் செல்லப்பிராணிகள் மூலம் மனிதர்களுக்கு ரேபிஸ் நோய் பரவுவது முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெ.கமாலுதீன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.பானுமதி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் இளையராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 68/2023 நாள். 25.09.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலத்திற்குட்பட்ட 31,32,46,47,48,49,62,63, 64,65,66,67,68,69,70, 80,81,82,83,84 க்குட்பட்ட பகுதிகளில் பராமரித்தல் பணி | 36 பணி | 18.10.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 19.10.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 525/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 27.09.2023



தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை - கட்டடம் (க & ப ) வட்டம் திருச்சி-1.

குறுகிய காலமின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 17 / 2023-24 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் :26.09.2023

முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விரிவான இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இரு உறை முறை)

ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம் திருச்சி–1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கட்டும் பணி | ரூ.630.79 | ரூ.3,25,400/- | 14 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின் படி) |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 04.10.2023 முதல் 12.10.2023 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 12.10.2023 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 13.10.2023 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ / 5282 / ஒப்பந்தப்புள்ளி /2023 கண்காணிப்புப் பொறியாளர் பொது., கட்டட (க & ப) வட்டம் திருச்சி-1.



**பெருநகர சென்னை மாநகராட்சி**

மின்துறை

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1/2990/2023 **ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

தியாகராய நகர் சட்டமன்ற கோட்டம் 130, 131, 132, 133, 134, 135 மற்றும் 141 யில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 25 ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கும் பணி – க்கான ஒப்பம்.

பணியின் மதிப்புத் தொகை 50,00,000/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 50,000/-

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 12.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 13.10.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 5350 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி3/4899/2023 (1 to 4)

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக (GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள உட்புற தார் சாலைகளில் ஒட்டுபணிகளை (கோல்டுமிக்ஸ் இன்ஜக்ஷன் பாட் ஹோல்ஸ் பாட்ச்சிங் ரிப்பேரிங் மெஷின்) மூலம் மேற்கொள்ளும் பணி (4 சிப்பங்கள்) | பணியின் மதிப்பு ரூ.73.00 இலட்சங்கள் (ஒவ்வொரு சிப்பங்களுக்கும்) | பணியின் மதிப்பு 1 சதவீதம் | இரண்டாம் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 05.10.2023 மாலை 3.00 மணி

ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 06.10.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 5329 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து



**பெருநகர சென்னை மாநகராட்சி**

மின்துறை

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1/2014/2023 **ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட (வார்டு 1-3, 11 & 22) பள்ளிகளில் 24 ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கும் பணி

பணியின் மதிப்புத் தொகை 48,00,000/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 48,000/-

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 12.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 13.10.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 5351 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை வட்டம், மகான்காளிகாபுரம் கிராமத்தில் தமிழக முதலமைச்சர் அவர்களின் தரிசு நிலங்களை தொகுப்பு நிலங்களாக மாற்றும் சிறப்பு திட்டமான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் நிதி ஆண்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 13.16 ஏக்கர் பரப்பளவில் உள்ள தரிசு நிலத் தொகுப்பில் தோட்டக்கலை துறை மூலமாக அமைக்கப்பட்டுள்ள சொட்டு நீர் பாசன அமைப்பு மற்றும்நடவு செய்யப்பட்டுள்ள கொய்யா பழச் செடிகள் அடங்கிய ஏழு விவசாயிகளின் வயல்களை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பார்வையிட்டு விவசாயிகளிடம் கலந்துரையாடி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது தோட்டக்கலைத் துணை இயக்குனர் ஐ.ஜெபக்குமாரிஅனி, ஒன்றிய கழக செயலாளர்கள் பெ.பழனி, சி.என்.சண்முகம், ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதா ஆபவணன், உள்பட அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு151 ல் உள்ள அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் தனியார் நிறுவனம் ( RMZ ) மூலம் ரூபாய் 2.60 கோடி மதிப்பீட்டில் 12 கூடுதல் வகுப்பறை கட்டடம் மற்றும் வார்டு155 ல் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளியில் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் கழக பொருளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.

## தண்டலம் ஊராட்சியில் நல உதவிகள் வழங்கல்!

திருவள்ளூர், செப். 28 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தண்டலம் ஊராட்சியில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் R.காந்தி, இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் வி.பி.கலைராஜன், நந்தனம் நம்பிராஜன், இ.ஏ.பி.சிவாஜி, ஜெ.மூர்த்தி, மு.பகலவன், மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், A.V ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஷ்வநாதன், கே.சுப்பிரமணி சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி. ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், ஆ.சத்யவேல், ஜான் (எ) பொன்னுசாமி, ஜி.இரவிக்குமார், பி.முத்து, அபிராமி குமாவேல், கே.வி.லோகேஷ், வி.பி. இரவிக்குமார், க.சுபந்த், கோல்டு மணி பா.தனசேகரன், சி.சுமன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



சேலம் அரசு கலைக்கல்லூரி மாணவர்களுக்கான ஆதி திராவிடர் நலத்துறை விடுதியில் நேற்று ஆய்வு மேற்கொண்ட போது, அங்குள்ள விடுதி மாணவர்கள் விளையாட்டு உபகரணங்கள் வேண்டுமென கோரிக்கை வைத்தையேற்று Cricket Bat– Carrom board – Tennis Bat – Football – Volleyball உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்ளனர்.

### கழக ஆட்சியில்தான் - பல ஆண்டுகளாக

# ஓடாமலிருந்த கோயில் தங்கத் தேர்களை உலாவரச் செய்துள்ளோம்!

## புரசைவாக்கத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, செப்.28-

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் மற்றும் மரத்தேர் செய்யும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (27.09.2023) சென்னை, புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத் தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள திரு க்கோயில் திருப்பணி களை விரைந்து முடித்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களில் பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்துவதற்காக தங்கத்தேர், வெள்ளித்தேர் மற்றும் மரத்தேர்களை உருவாக்குவது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், ரூ.31.24 கோடி மதிப்பீட்டில் 51 புதிய மரத்தேர்கள் செய்வதற்கும், ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் 13 மரத் தேர்களை மராமத்து செய்வதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் செய்வதற்கும், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயில், சென்னை, காளிகாம்பாள் திருக்கோயில், திருக்கருக்காவூர், கர்ப்பகரட்சாம்பிகை திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், திருத்தணி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர்கள் செய்வதற்கும் அறிவிப்பு செய்திருந்தோம்.

அதன்படி இன்றைய தினம், புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட உபயதார நிதியின் மூலம் ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத் தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தோம். நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில் தங்கத்தேர் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் உருவாக்கும் பணி நிறைவு பெற்று தணிகை முருக பெருமானுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த திருக்கோயில் தங்கத்தேர்களை மீண்டும் உலாவர செய்துள்ளோம். குறிப்பாக 12 ஆண்டுகள் ஓடாமல் இருந்த ராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர், 2 ஆண்டுகள் ஓடாமல் இருந்த வடபழனி மற்றும் திருச்செந்தூர் தங்கத்தேர்களை ஓட வைத்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.10 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் தங்கத் தேர் மற்றும் மரத்தேர் பணிகளை தவிர்த்து சுமார் ரூ.4 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுர விமானங்கள் மற்றும் சன்னதிகளின் மராமத்து பணி மற்றும் வர்ணம் பூசும் பணி, பிரகாரத்தில் கருங்கல் பதிக்கும் பணி, மின் பணிகள், நந்தவனத்தை சீரமைத்தல், காரியக் கூடம் திரும்ப கட்டுதல், திருக்குளத் திருப்பணி போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர், இத்திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முழு ஈடுபாட்டோடு கண்காணித்து விரைவுபடுத்தி வருகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு நடத்தப்படும்.

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் திருக்கோயில்களின் அனைத்து திருக்குளங்களையும் சுத்தப்படுத்தி மழைநீரை சேகரித்து தேக்குவதற்கான கட்டமைப்புகளை சீரமைத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஏற்கனவே துறையால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி திருக்கோயில் திருக்குளங்கள் தூர்வாரி சுத்தப்படுத்தப்பட்டு மழைநீரை சேகரிக்கும் வகையில் தயாராகி வருகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் அ.சங்கர், இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சி.நித்யா, சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ்.ரவிச்சந்திரன், திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் டாக்டர் பெ.வெற்றிக்குமார், அறங்காவலர்கள் எம்.ஏ.கோபிநாத், கே.எஸ்.குமாரசாமி, பி.ரத்தினம், திருமதி நா. லீலாவதி, செயல் அலுவலர் சா.இராமராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆவடி காமராஜர் நகரில் உள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளியில்

# 3 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் செப் 28; -

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி காமராஜர் நகர் பகுதியில் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எல்.கே.ஜி முதல் 12ம் வகுப்பு வரை சுமார் 2,400 மாணவிகள் பயின்று வருகின்றனர். இங்கு 70 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இப்பள்ளியில் 10 கான்கிரீட் கட்டிடங்களும் உள்ளன இதில் கணினி அறை, ஸ்மார்ட் வகுப்பு தளவாடங்கள், நூலகம், தையல் பயிற்சி அறை,. உடற்பயிற்சி ஆசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை உள்ளது

இந்நிலையில் சமீபத்தில் பெய்து வரும் மழையினால் ஒரு காங்கிரீட் கட்டிடம் இடிந்து விழும் அபாயம் உள்ளதால் மாணவர்களை அந்தக் கட்டிடத்தில் அமர வைப்பதில்லை. கடந்த சில முன் பழைய கட்டிடங்களை இடித்து அகற்றி விட்டனர்.

இதனால் இட வசதி இல்லாமல் பிரேயர் மேடை, நடைபாதை, ஆய்வு அறை, உடற்பயிற்சி ஆசிரியர் அறை, விளையாட்டு மைதான என அனைத்து இடங்களிலும் மாணவர்களை அமர வைத்து பாடங்களை கற்பித்து வருவதாக ஆசிரியர்கள் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. விடம் கோரிக்கை வைத்தனர்.

அதன் பேரில் ஆவடி காமராஜர் நகர் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி மூன்று கோடியே 7 லட்சம் மதிப்பீட்டில் மூன்று தளம் கொண்ட 16 கூடுதல் வகுப்பறைகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு கட்டிடம் கட்டுவதற்காக பணிகளை துவக்கி வைத்தார். இதனை தொடர்ந்து

ஆவடி 44 ஆவது வார்டு காமராஜர் நகர் ஏழாவது தெருவில் 10 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் அமைப்பதற்காக ஆழ்துளை கிணறை பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகாரஜ், மாநகராட்சி பொறியாளர் ரவிச்சந்திரன், மண்டல குழு தலைவர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், மற்றும் ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

### தலைமை : மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.! வட்டச் செயலாளர் எம்.சரவணன் ஏற்பாட்டில்

# மாதவரம் தெற்கு 32வது வட்டத்தில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம்!

## நடுவர் : முனைவர் கோவி.செழியன்! எஸ்.நந்தகோபால் - ஜி.துக்காராம் முன்னிலை!

சென்னை, செப். 28-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி 32 வது வட்டக் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் சிறப்பு பட்டிமன்றம் 32 வது வட்டக் கழக செயலாளர் எம். சரவணன் ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாதவரம் 3வது மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், 32 வது மாமன்ற உறுப்பினர் புத்தகரம் இ.ஏழுமலை, 32வது அ.வட்டச் செயலாளர் துரை ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு பட்டிமன்ற நடுவராக தமிழ்நாடு அரசு தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன் செயல்பட்டார்.

பட்டிமன்ற பேச்சாளர்கள் கரூர் முரளி, தூத்துக்குடி சரத் பாலா, நெல்லிக்குப்பம் புகழேந்தி, சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று வாதிட்டனர்.

இந்த சிறப்பான விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் தேவி கவுதமன், டி.சுந்தரம், டி. ரமணன், விஜயலட்சுமி, ஆனந்த், எம்.செல்வம், கே.பத்மநாபன், ஜி.கௌதம் பாலாஜி, ஆர். தேவன் ஹேமாவதி, பி. மாரிமுத்து, எஸ்.என். கோதண்டன், எம்.சேகர், சி.எல்.உதயகுமார், எஸ். கே.அன்பழகன், ஜெ.நரசிம்மன், வி.கௌதமன், எம்.ஹரிபாபு, முல்லை பி. ஆறுமுகம், ஆர்.சுந்தர்ராஜ், என்.ரவிச்சந்திரன், ஆர். ஸ்ரீதரன், எஸ்.வேலுச்சாமி, இ.இராமச்சந்திரன், என்.கீதா, ஆர்.முருகன், எம்.சாமுவேல், என்.செல்வம், ஆர்.கேதர்நாத், டாக்டர் ஏ.நிவேதா, எஸ்.வீரமணி, இ.சத்யநாராயணன், சி.ஆனந்த், எம்.செல்வி, பி.பானுமூர்த்தி, எஸ். ஆனந்த, கண்ணன், வி.பிரபாகர், ஆர்.எஸ்.மணி, வி. கோபிநாத், ஜி.முருகானந்தம், இரா. கண்ணன், எல்.ஐ.சி. ஆர். வேலு, இ.சிவக்குமார், என்.கார்த்திக், டெய்லர் சீனு, எஸ்.காஞ்சனா, வி. ரகு, டி.கேசவன், கே.சரவணன், பூபாலன், என்.அரி, பி.அர்ஜுனன், உமாபதி, டி.ரமேஷ், கே.கற்பகம் மற்றும் தாய்மார்களும் கழகத் தொண்டர்களும் பொது மக்களும் இந்நிகழ்ச்சியில் பெருந் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஆர்.கே.நகர் அன்னை சத்தியா நகரில் சாலைப் பணிக்காக குடியிருப்புகள் அகற்றம்:

# 6 பயனாளிகளுக்கு புதிய அடுக்குமாடி குடியிருப்பு ஆணை!

## சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் வழங்கினார்!

சென்னை, செப். 28-

ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வார்டு 41 அன்னை சத்யா நகரில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வண்ணம் புதிதாக அமையவிருக்கின்ற மாற்றுப் பாதையில் சாலை அமைக்கும் பணிக்காக அகற்றப்பட்ட 6 குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் புதிய அடுக்குமாடி குடியிருப்பு களுக்கான ஆணையை சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் பயனாளிகளுக்கு வழங்கினார்

இந்நிகழ்வில் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மண்டலக் குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் பா.விமலா, இ.மணிமேகலை ஏழுமலை, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி. மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், பகுதி நிர்வாகிகள் எம். கோவிந்தராஜ், எம்.லோகநாதன், வட்ட செயலாளர்கள் ஆர்.ஏ.எம்.சசிக்குமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், கி.தேவன், எஸ். எல்.சுந்தர், உள்ளிட்ட வாரிய செயற்பொறியாளர், காவல் ஆய்வாளர், அரசு அலுவலர்கள், கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டக் கழக செயலாளர் ஆர்.ஏ.எம். சசிக் குமார் மேற்கொண்டார்.



விழுப்புரம் நகரம், சாலமேடு நடுநிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் திறந்து வைத்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர், வட்டாட்சியர், முதன்மை கல்வி அலுவலர், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் இரா.கேசவன், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜனனி தங்கம், மணவாளன், புருஷோத்தமன், வார்டு செயலாளர்கள் என்.டி.தங்கம், எம்.எம்.எஸ்.சுந்தர், என்.மணிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப், 28-

அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட் அரியலூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் நேற்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப வரதராஜன்பேட்டை தென்னூரிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும், இந்த அரசுப்பேருந்து தடம் எண் 171P, 171D தென்னூர் சென்னை வழித்தடத்தில் வரதராஜன் பேட்டை, ஆண்டிமடம், விருத்தாசலம் ஆகிய பகுதிகளை தொட்டு இயக்கப்படும். இப்பேருந்து காலை 8.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப்பட்டு மாலை 3.15 மணிக்கு சென்னையை சென்றடையும். இதே போன்று மாலை 4.30 மணிக்கு தென்னூரில் இருந்து புறப்பட்டு இரவு 11.00 மணிக்கு சென்னையை சென்றடையும் வகையில் 2 அரசுப் பேருந்துகள் மூலம் தினசரி 2 நடைகள் இயக்கம் செய்யப்படுகிறது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள், வியாபாரிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் மிகுந்த பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.



செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி அலுவலகக் கூட்டரங்கில் மழைக்காலங்களில் ஏற்படும் நோய்கள் டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய் தடுப்பு குறித்த செங்கல்பட்டு மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகுமீனா, சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் காரியமங்கலத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், பிரகாஷ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர்.தருண், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆர்.சிவகுரு, எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர். அசோக்குமார், பி.என்.சி.மகேஷ்குமார், கலைச்செல்வன், செல்வராஜ், இராஜகோபால், கார்த்திக், முத்தமிழன், ஹரி பிரசாத், கோடீஸ்வரன், தங்கசெழியன், நாசர் மற்றும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.




சேலம் அரசு கலைக்கல்லூரி அருகில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கடும் மழை பெய்து கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் மாணவர் விடுதிக்குச் சென்று மாணவர்கள் பதிவேடு, தற்போது தங்கியுள்ள மாணவர்கள் எவ்வளவு பேர் என்று சோதனை செய்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு வகைகள் குறித்து கேட்டறிந்து பொருட்கள் இருப்பு வைத்து இருக்கும் அறைக்குச் சென்று பொருட்களின் தரத்தை ஆய்வு செய்தார். பின்னர் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அதுபோது அமைச்சர் கே.என்.நேரு, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமது, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.கார்மேகம், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் இருந்தனர்.




பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இலவச அவசர மருத்துவ ஊர்தி.



37

# இடம் பொருள் கலைஞர்







# இலவச அவசர மருத்துவ ஊர்தி!

## உயிர்களைக் காப்பாற்றும் உன்னதம்!

1990-ஆம் ஆண்டு முதல் 'சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டுக்கான நிறுவனம்' எனும் சர்வதேச அமைப்பால், **'உலக நோய்ச் சுமை'** என்ற ஆய்வு உலக அளவில் நடத்தப்பட்டு வருகிறது. அதில் 1990-ஆம் ஆண்டு ஆய்வு முடிவில் மனிதர்களை அதிகம் கொல்லும் நோய்க் காரணிகளின் பட்டியலில் முதல் இருபது இடங்களில் சாலை விபத்துகள் இடம்பெற்றிருந்தன. 2019-ஆம் ஆண்டு ஆய்வு முடிவில் இன்று சாலை விபத்துகள் ஏழாம் இடத்தில் உள்ளன.

ஆம்... நகரமயமாக்கல் அதிகரிக்க, பொருளாதாரம் வளர, தனிநபர் போக்குவரத்துப் பயன்பாடுகள் பெருக, ஒவ்வொரு நாளும் சாலைகளில் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. பெரும்பாலும் இந்த விபத்துகள் உயிரிழப்புகளில் முடிவதில்லை என்றாலும், விபத்துகளில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், விபத்தில் சிக்கியவர்களுக்கு உடனடியான மருத்துவ ஊர்தி கிடைத்தால், பெருமளவில் உயிரிழப்புகளையும், உறுப்பு இழப்புகளையும் தவிர்க்க முடியும் என்பதுதான். இதை உணர்ந்த காரணத்தால்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2008-ஆம் ஆண்டு '108' அவசர கால இலவச மருத்துவ ஊர்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**உடனடி மருத்துவ உதவி தேவைப்படும் அவசர காலத்தில் 108-ஐ சுழற்றினால் அடுத்த 20 நிமிடங்களில் மருத்துவப் பணியாளர்களுடன் ஆம்புலன்ஸ் வந்து நின்றது.**

### அவசர காலத்தின் ஆபத்பாந்தவன்

முத்தமிழறிஞர் கலைஞர் இந்தத் திட்டத்தைச் சிந்தித்தபோது முதலில் கிராமங்களைத்தான் மனதில் வைத்திருந்தார். கிராமப் பகுதிகளில் மகப்பேறுக் காலங்களில் கர்ப்பிணிகளும், விஷக் கடிகள் மற்றும் வெறிநாய்க் கடிகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுவோரும் உடனடியாக சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்க நேரிடுகிறது.

அந்த விலை மதிப்பில்லா உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட கலைஞர் அரசு, 16 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 187 வட்டாரங்களில் அவசரகால மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலமாக முதலில் செயல்படுத்தப் பட்டன.

பிறகு, இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மேலும் செம்மையாகச் செயல்படுத்திட, அன்றைய ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலம், ஹைதராபாத் நகரைச் சேர்ந்த இ.எம்.ஆர்.ஐ. என்னும் தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. இந்நிறுவனம் ஆந்திரம், குஜராத் மற்றும் உத்ராஞ்சல் (உத்தரகாண்ட்) மாநிலங்களில் இதுபோன்ற திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, நல்ல அனுபவம் பெற்றிருந்தது. எனவே அந்த நிறுவனத்தின் மூலம் தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திட, தமிழ்நாடு அரசு 2008-ஆம் ஆண்டு மே 6 -ஆம் தேதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது.

அதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக குளிர்சாதன வசதி மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் பொருத்தப்பட்ட 198 அவசர கால மருத்துவ ஊர்திகள் கழக அரசால் 17 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. மேலும், ஏற்கெனவே வேறு சில தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வந்த 187 ஆம்புலன்ஸ்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, 34 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 385 ஆம்புலன்ஸ்கள் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டன.

> 2008-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 முதல் 2011-ஆம் ஆண்டு மார்ச் 7 வரை, 632 ஆம்புலன்ஸ்கள் தமிழ்நாட்டின் குறுக்கும் நெடுக்குமாக ஓடி, 8 இலட்சத்து 62 ஆயிரத்து 576 பேர்களை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சேர்த்து, சிகிச்சை அளித்தன. இதனால் 34 ஆயிரத்து 407 உயிர்கள் காப்பாற்றப்பட்டன. மேலும், 2 இலட்சத்து 20 ஆயிரத்து 294 மகப்பேறுகளும் இதில் அடங்கும்.
>
> இன்று 1,353 ஆம்புலன்ஸ்கள் நம்மிடம் உள்ளன.

### இருபது நிமிடங்களில் உதவி

தொடக்கத்தில் இந்தத் திட்டத்துக்குரிய 'மத்திய செயல்பாட்டு நிலையம்', சென்னை அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் இருந்த சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி நிலையத்தில், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்தால் தற்காலிகமாக அமைக்கப்பட்டது. மேலும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களை இ.எம்.ஆர்.ஐ. நிறுவனம் தேர்வுசெய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்தது.

மருத்துவத்துறை, தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகிய துறைகளின் அவசர உதவி தேவைப்படும் பொதுமக்கள், இந்தத் திட்டத்துக்கென அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் 108 ஐ பயன்படுத்தி, தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் இந்த மையத்தைத் தொடர்பு கொள்ள முடிந்தது. உடனடி மருத்துவ உதவி தேவைப்படும் அவசர காலத்தில் 108-ஐ சுழற்றினால் அடுத்த 20 நிமிடங்களில் மருத்துவப் பணியாளர்களுடன் ஆம்புலன்ஸ் வந்து நின்றது. உதவி தேவைப்படுவோருக்கு முதலுதவி தந்து, அவர்களை அருகில் உள்ள அரசு அல்லது தனியார் மருத்துவமனையில் சேர்த்து, அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த சிகிச்சைக்காக பாதிக்கப்பட்டோரிடம் முதல் 24 மணி நேரத்துக்கு எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படவில்லை.

இப்படி ஒரு திட்டத்தை 2008-இல் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர்-15 ஆம் தேதி சென்னையில் 20 அவசர மருத்துவ ஊர்திகளை வழங்கி, முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி வைத்தார்.

கலைஞர் கொண்டு வந்த இந்தத் திட்டத்தை இன்று பல கட்சியினரும் 'நாங்கள்தான் கொண்டு வந்தோம்' என்று உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால், அவர்கள் பல விஷயங்களைச் சுலபமாக மறந்துவிடுகிறார்கள். அதாவது, கலைஞர் 108 ஆம்புலன்ஸ் திட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்பே அப்படியொரு திட்டம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அது இலவசமாகவோ அல்லது 24 மணி நேரமோ அல்லது மக்கள் எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளும் அவசர உதவி எண்ணாகவோ அல்லது தமிழ்நாடு முழுவதும் கிடைக்கும் சேவையாகவோ இருந்திருக்கவில்லை. இன்னொரு புறம், 'எங்கள் தலைவர் மத்தியில் இருந்தபோதுதான் இது கொண்டு வரப்பட்டது' என்பார்கள். அவர் ஒன்றிய அமைச்சராக ஆனதே தி.மு.க. கூட்டணியில் இருந்தபோதுதான் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

வேறு பல மாநிலங்களிலும் இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், அவற்றிலிருந்து தமிழ்நாடு பல வகைகளில் தனித்துத் தெரிவதற்குக் காரணம், அதிக எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ்கள் மூலம் அதிக இடங்களை, குறைவான நேரத்தில் சென்றடைவதும், மகப்பேறு தொடர்பான சிகிச்சைக் கருவிகள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ்கள் மூலம் தாய் சேய் மரண எண்ணிக்கையைக் குறைத்ததும்தான். அதற்காகவே வருங்காலத் தலைமுறை முத்தமிழறிஞர் கலைஞரின் இந்த உன்னதத் திட்டத்தை வாழ்த்தும்... வணங்கும்..!

...வலம் வருவோம்

## உச்ச நீதிமன்றத்தில் சைகை மொழி!

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட், இரண்டு மாற்றுத்திறனாளி சிறுமிகளின் வளர்ப்புத் தந்தை என்பது பலரும் அறிந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவர் தனது இரண்டு மகள்களையும் உச்ச நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்து வந்து, உச்ச நீதிமன்றம் எவ்வாறு செயல்படுகிறது, அங்கு அவர் என்ன செய்கிறார் என்பதை எல்லாம் தனது மகள்களுக்கு விளக்கினார்.

தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தின் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதன்முறையாக சைகை மொழிபெயர்ப்பாளர்கள், பார்வையற்றோர் பங்கெடுத்தனர். நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ் மற்றும் நிகழ்ச்சி விவரங்கள் பார்வையற்றோர் படிக்க உதவும் வகையில் முதன்முறையாக பிரெய்லி பதிப்பாகவும் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த வெள்ளி அன்று உச்ச நீதிமன்றத்தில் செவி மற்றும் பேச்சுத் திறனற்ற பெண் வழக்கறிஞர் சாரா சன்னி என்பவரை காணொலி வாயிலாக சைகை மொழி மூலமாக வாதாட சந்திரசூட் அனுமதித்துள்ளார். உச்ச நீதிமன்ற வரலாற்றில் இப்படி நடப்பது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது. நீதித்துறையின் மீது சாமானியர்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருப்பதற்கு சந்திரசூட் போன்றவர்கள்தான் காரணம்.

## ஃப்ளாஷ்பேக்





சி.பூபாலன் - சி.லீலா

### திருமண வாழ்த்தாக திருக்குறள்!

16.02.1997 ஆண்டு எனக்கும் என் இணையர் லீலா அவர்களுக்கும் அன்றைய வணக்கத்துக்குரிய மேயர், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சுயமரியாதை இணையேற்பு விழா நடைபெற்றது. அதில் அய்யா கோவை மு.ராமநாதன் அவர்களும், பொங்கலூர் ந. பழனிசாமி ஆகியோரும் கலந்துகொண்டு வாழ்த்தினர். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் திருக்குறளோடு திருமணத்துக்கு வாழ்த்துக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார். தளபதி தலைமையில் சாதி மறுப்பு சுயமரியாதை திருமணம் செய்தது இன்றைக்கு நினைத்தாலும் மலரும் நினைவாக இருக்கிறது.

**-சி. பூபாலன் - சி. லீலா,**
**கோவை மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி :
அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### உருக்கு ஆலையும் உருட்டு ஆலையும்

**1970-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் சேலம் உருக்காலை தொடங்கப்படும் என நாடாளுமன்றத்தில் அறிவிக்கப் பட்டது. அதே ஆண்டு செப்டம்பர் மாதம் உருக்கு ஆலைக்கு அடிக்கல் நாட்டு விழா கலைஞர் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து உருக்கு ஆலைக்கான பணிகள் நிறைவேற்றப் பட்டு, நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. ஆனால் கழக ஆட்சி 76-இல் கலைக்கப் பட்ட பின், உருக்கு ஆலை, உருட்டு ஆலைத் தொழிற்சாலையாக மாற்றப் பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

254





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131